# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன்

J A M A K K A R A N

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15


VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 3
MARCH 2020 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=



Mob.: No. **9894261333** இந்த எண். SMS உபயோகத்துக்காக மட்டும்
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பானவர்களே,

உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.

**மலேசியா பினாங்**

(1) Victory Lutheran Church
(2) Batumaung பேப்டிஸ்ட் சர்ச்
(3) Bukit மெர்த்தாஜாம் லூத்தரன் சர்ச்
(4) **கோலாலம்பூர்** Port கிளாங் லூத்தரன் சர்ச்சிலும் கூட்டங்கள் ஆசீர்வாதமாக நடந்தேரின.
(5) (மலேசியா) **Johar Bhahru**வில் ஒரு சிறு விசுவாசிகளின் ஐக்கிய கூட்டம் ஒரு வீட்டில் வைத்து நடத்தப்பட்டது. இங்கு கூடிய விசுவாசகள் நல்ல வேத வசன கேள்விகளை மனம் திறந்து கேட்க, நானும் வேத வசன அடிப்படையில் அவர்களுக்கு பதில் தந்தது ஒரு பிரசங்கமாகவே அமைந்தது.
(6) **சீனாவில்** ஆரம்பித்த கொரோனா வைரஸ் வியாதி சீனா அருகில் உள்ள **தாய்லாந்திலும்** பரவிய காரணத்தால் அங்கு A.C. அமைக்கப்பட்ட ஆலயம் யாவும் மூடப்பட்டது. **கூட்டங்கள்** எதுவும் நடக்க கூடாது என்று கட்டளை யிடப்பட்டது. மீன், இறைச்சி மார்க்கெட் மூடப்பட்டது. **ஆகவே நான் பேசவேண்டிய** கூட்டம் அடுத்த வருடத்துக்கு மாற்றி வைக்கப்பட்டது. ஆனால் அடுத்த வருடம் அவர்களுக்கு தேதிகள் ஒதுக்கவில்லை.
(7) **சிங்கப்பூர் :** முதலில் மார்தோமா சபை மலையாளிகள் இணைந்து சிறு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆசீர்வாதமாக அமைந்தது. சிங்கப்பூர்க்கு 3 நாட்கள் மட்டுமே ஒதுக்கியிருந்தேன், ஆகவே சிங்கப்பூரில் மற்ற சபைகளுக்கு தேதிகள் ஒதுக்கவில்லை.

# MARCH - 2020

ஆனால் ஜாமக்காரன் வாசகர் வீட்டில் சிறு ஐக்கிய ஆவிக்குரிய ஆலோசனைகளை, குடும்ப கூடுகையில் நடத்தினேன். இந்து மதத்திலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நல்ல வைராக்கிய விசுவாசம்கொண்ட அந்த குடும்பத்தினருடன் 1 மணி நேரம் 40 நிமிட நேரம் பகிர்ந்துக்கொண்டது எனக்கு திருப்தியாக இருந்தது. அவர்களுக்கும் பிரயோஜனமாக அமைந்திருக்கும்.

அதோடு எதிர்பாராதவிதமாக இந்து மதத்திலிருந்து இயேசுவை ஏற்றுக்கொண்டவர் என் யூ–டியூப் பிரசங்கத்தை கேட்டு இந்தியாவிலிருந்து பல நாட்களாக தொலைபேசியில் என்னோடு தொடர்புகொண்டவர், அவர் குடும்பத்தில்தான் மிக அதிக நேரம் செலவழித்தேன், வசனத்தை கேட்பதில் அவர்களின் வாஞ்ஜை எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. அத்தனை பேரும் மிகவும் படித்தவர்களாக இருந்ததால் வசனத்தை புரிய வைப்பது எளிதாக இருந்தது.

கடைசியாக சிங்கப்பூர் ஆங்கிலிக்கன் சபையின் பழைய செயலர் அவர்களின் வீட்டிலும் வசனத்தை பகிர்ந்துகொண்டு ஜெபித்து இந்தியா பயனமானேன். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

## கொரோனோ வைரஸ்

மருந்து கண்டுபிடிக்க முடியாத பல புதிய வைரஸ்களை நாம் அறிவோம். அந்த வரிசையில் **கொரோனோ வைரஸ் சீனா** தேசத்தில் தோன்றி சைனா தேசத்திலேயே பரவி கொத்துக்கொத்தாக ஆயிரக்கணக்கில் மக்கள் மரித்து போனார்கள்.

தடுப்பு மருந்து இதுவரை கண்டுபிடிக்க முடியாததால் பரவும் வியாதியை கட்டுப்படுத்த முடியாதபடி இப்போது அந்த வைரஸ் கிருமி உலகெங்கும் பரவிவிட்டது. இந்த கிருமி காற்றில் பரவுகிறது. தும்மினால் இருமினால் பஸ்ஸில் அல்லது எக்ஸ்கலேட்டரில், ரயிலில் உள்ள **கைபிடியில்** கை வைத்தால் எளிதில் பரவுகிறது. அதனால் கைகளை சோப்பு போட்டு கழுவுங்கள் என்ற விளம்பரம் உலகெங்கும் காட்டப்படுகிறது.

அணுகுண்டுவால் ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும்தான் அழிக்க முடியும். ஆகவே விஞ்ஞானிகள் புதிதாய் கண்டு பிடித்ததுதான் **வைரஸ் குண்டு.** இந்த குண்டு ஒரு நாட்டில் வெடித்தால் கட்டிட அழிவு உண்டாகாது. அந்த குண்டில் வைத்து அனுப்பப்பட்ட பயங்கர **கொள்ளை நோய் கிருமிகள்** குண்டு வெடித்த தேசமெங்கும் காற்றில் பரவி **விஞ்ஞானம்** கண்டறிய முடியாத **கிருமிகள்** மனிதர்களின் சுவாசத்தின் வழியாய் புகுந்து **நுறை ஈரலை** தாக்கி சில மணி நேரத்தில் சாகடித்துவிடுகிறது. அப்படி ஒரே வீட்டில் அத்தனைபேரும் மரித்து போகும் பயங்கர கொள்ளை நோயாகும். அது முதலில் குண்டு விழுந்த நகரத்தில் உள்ள மனிதர்கள் சாவார்கள், அந்த கிருமி வவ்வால், **பாம்புகளில் பரவ, வவ்வால்** எங்கெங்கு போகிறதோ அங்கெல்லாம் அந்த கிருமி பரவி, பலுகி பெருகி தேசத்தையே அழிக்கும் தன்மைகொண்டது.

கொல்லப்பட்ட ஈராக் அதிபர் சதாம் உசேன் அப்படிப்பட்ட குண்டு வைத்திருப்பதாக கூறிதானே உலகத்தையும் குறிப்பாக அமெரிக்காவையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினான். அதன்பின் உலக நாடுகள் தலையிட்டன. இப்போது உலகத்தில் 3 நாடுகள் கிருமிகளை பறப்பிவிடும் பயங்கர அணுகுண்டு வைத்திருப்பதாக அறிகிறோம்.

வதந்தியாக வந்த செய்தி என்னவென்றால் இந்த கொடிய கொரோனோ வைரஸ் கண்டுபிடித்த **சீனா** நாட்டு விஞ்ஞானிகளின் பாதுகாக்கப்பட்ட பரிசோதனை அறையிலிருந்து எப்படியோ விஞ்ஞானிகள் அறியாது அங்கிருந்து பரவிய கிரிமிகள் **சீனா** மக்களையே கொன்றது. சீன அதிபர் நாட்டைவிட்டே வெளியேறி பதுங்கிகொண்டார். நடுவில் ஒரு நாள் மட்டும் ஒரு குறிப்பிட்ட ஆஸ்பத்திரியில் ஒரு வியாதியஸ்தரோடு நிற்பதைப்போல் படம் எடுத்து அதை TVயில் சீனா முழுவதும் காண்பித்து பிறகு சீன அதிபர் மறைந்துவிட்டார்.

கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழிபடி உலக எதிரி நாட்டு மக்களை வியாதி கிருமிகளால் கொல்ல நினைத்த சொந்த நாட்டையே அந்த கிருமி தாக்குகிறது.

### இப்போது நடப்பது என்ன ?

சீனா மக்களை யாரும் எங்கள் தேசத்துக்கு வரவேண்டாம் என்று உலக நாடுகள் பகிரங்கமாக அறிவித்துவிட்டது. சிங்கப்பூர் அதில் படு ஜாக்கிறதையாக சீனா தேசத்தில் இருந்து வந்த எந்த விமானத்தையும் விமான தளத்தில் இறக்கவிடாமல் தயவு தாட்சன்யம் பாராமல் திரும்பி அனுப்பிவிட்டது.

சிங்கபூரில் ஒரே ஒரு நபருக்கு அந்த கொரோனா வியாதி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டவுடன் கப்பலில் ஏற்றி கடலின் நடுவே தங்கவைத்து வைத்தியம் செய்கிறார்கள்.

இப்போது இநதிய தலைநகர் டெல்லியில் கொரோனா வியாதி வேகமாக பரவ ஆரம்பித்து விட்டது. இதை எழுதும் போது 20 நபர்களுக்கு வியாதி கிருமிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மொத்தம் 5000 நபர்கள் வியாதி பிடித்திருக்கும் என்ற சந்தேகத்தில் தனித்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

## கடைசி காலம் நெருங்கிவிட்டது.

மத். 24:6ல் கூறியபடி கடைசி நாட்களின் அடையாளங்கள் ஒன்று **கொள்ளை நோய் ஆகும். டெங்கு போல** இந்த வியாதியும் கொள்ளை நோயோடு சேர்ந்ததாகும்.

நாட்டு ஜனங்கள் தங்களை தாழ்த்தி கர்த்தரை தேடினால் கர்த்தர் நிச்சயம் வியாதியை நீக்கி ஷேமத்தை தருவார். நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பின் வாசலில் நிற்கத்தக்கதாக ஒரு புருஷனை தேடினேன், ஒருவனையும் கானேன் என்கிறார். எசே. 22:30

கீழே படத்தில் காண்பது சீனா தேசத்தில் உள்ள அந்த குறிப்பிட்ட மாநிலத்தில் அனைத்து ஆஸ்பத்திரிகளும் வியாதியஸ்தர்களால் நிறைந்துவிட்டபடியால் 5 நாட்களில் அவசரமாக கட்டப்பட்ட பிரமாண்டமான பல ஆயிரம் படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியைதான் நீங்கள் பார்க்கிறீர்கள்.

இதில் கொடுமை என்னவென்றால் சீனாவின் கிராம பகுதியில் உள்ள வியாதியஸ்தர்களை குணமாக்க முடியாது என்று அறிந்தால் ராணுவம் அவர்களை சுட்டு கொன்று உறவினர்கள் கூட கானாதபடி எரித்துவிடுவதாக கேள்விபடுவது எத்தனை கொடூரம்.

சீனாவில் பிசாசை (டிராகானை) வணங்கும் சீனர்களைவிட **பௌத்த மதத்தை** தழுவிய சீனர்களின் எண்ணிக்கை மிக அதிகம். ஆனால் சர்வாதிகார ஆட்சி நடப்பதால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

- ☐ கடைசியாக வந்த செய்தி பெரும்பாலான சீனா ஊர்களில் உள்ள **இரகசிய கிறிஸ்தவர்தான்** பல ஊர்களுக்கு சென்று வியாதியஸ்தர்களுக்கு உதவி செய்து, கிறிஸ்துவின் அன்பை கூறுகிறார்கள். அவர்களால் **ஜெபித்து காப்பாற்றபட்டவர்கள்** ஏராளம் என்ற செய்தி தேவனை துதிக்க செய்கிறது.

எப்படியோ சீனாவிலிருந்து பரவிய **கொரோனா** கிருமி என்னை துரத்த துரத்த ஒவ்வொரு நாடாக கடந்து **எந்த முகமூடியும் அணியாமல்** நான் இந்தியா வந்து சேர்ந்துவிட்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- ☐ மலேசியா, சிங்கப்பூர் ஊழியத்துக்கு நான் சென்ற 15 நாட்களில் நீங்கள் எழுதிய கடிதங்கள் email. SMS யாவையும் படித்து ஜெபித்து பதில் எழுதி கொண்டிருக்கிறேன். அவைகளை முடித்து இந்தியாவில் தமிழ்நாட்டில் **இரட்டைக்கோட்டை – தண்டா** என்ற மலை ஆதிவாசிகளிடம் வைத்தியத்துடன் சுவிசேஷ ஊழியமும் செய்ய புறப்பட்டுவிட்டேன். என்னோடு Dr. Mrs. **இந்துமதி,** M.B.B.S., (அரசு மருத்துவர்) அவர்களும் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து தமிழ் சகோதரர்கள் சகோ. தேவராஜ், சகோ. ஜான்நைட் ஆகியோரும் ஊழியத்தில் கலந்துகொள்கிறார்கள். பாஸ்டர் பிச்சையா அவர்களின் குழு இந்த மலை ஊழியத்தை ஏற்பாடு செய்துள்ளது.

### தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

நீங்கள் அனுப்பிய காணிக்கைகள் யாவும் வந்து சேர்ந்தன, மிக்க நன்றி, கர்த்தருடைய கிருபை உங்கள் அணைவரோடும் இருப்பதாக.

***- Dr. Pushparaj***

# கேள்வி? பதில்

**குறிப்பு :** வசன அடிப்படையில் நல்ல செய்திகளை மற்ற ஆவிக்குரிய பத்திரிக்கையிலிருந்து எடுத்து என் வாசகர்களுக்காக ஜாமக்காரனில் வழமையாக வெளியிடுவேன். என் வாசகர்களின் **ஆவிக்குரிய வளர்ச்சிதான்** எனக்கு முக்கியம். அதன் அடிப்படையில் நல்ல வேத பண்டிதர்கள் எழுதிய செய்திகளை இப்போதும் சமர்ப்பிக்கிறேன். வேத வசன **பக்தி விருத்தி** மிக முக்கியம். தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான **கிறிஸ்தவ பத்திரிகைகள்** வெளியிடப்படுகிறது. அவைகளை வாசகர்கள் தெரிந்தெடுக்கும்போது ஜெபித்து தெரிந்தெடுங்கள்.

அந்த கூட்டங்களை நடத்துபவர்களால் சுகமளிக்கும் கூட்டங்களில் கூறப்படும் அல்லது வெளியிடப்படும் சாட்சிகளும் அந்தந்த கூட்டங்களிலலயே **மேடையில் கூறப்படும் சாட்சிகள்** எதுவும் வாகர்களுக்கு, உங்களுக்கு **பக்தி விருத்தியை** உணடாக்காது. அந்த சாட்சிகள் நீங்களும் சுகமாக வேண்டும் என்ற **ஆசையை மட்டும்** உண்டுபண்ணும். உங்கள் **ஆத்துமாவை** தொடாது. மட்டுமல்ல அந்த சாட்சிகள் உங்களை **குழப்பிவிடும்** ஆபத்து உண்டு. அப்படிப்பட்ட பத்திரிகைகளை நீங்கள் வாசிப்பதின் மூலம் உண்டாக்கும் ஜாக்கிறதை !

## இயேசு கிறிஸ்துவா? தேவ குமாரனா?

ஆதி அப்போஸ்தலரான பேதுருவும், பவுலு**ம் இஸ்ரவேலலர்கள்** மத்தியிலே, பெத்லகேமில் பிறந்து, மரித்து உயிர்த்த நசரேனாகிய **இயேசுதான் கிறிஸ்து** தான் மேசியா என்றும், **தேவ குமாரன்** என்றும், **வேத வாக்கியங்களைக் கொண்டு** திருஷ்டாந்தப்படுத்தி, அவர்களைக் கிறிஸ்துவுக்குள்ளாக வழிநடத்தினார்கள். (அப். 18:28, 2:36, 9:22,20) அப்படியானால், **கிறிஸ்துவும் தேவ குமாரனும்** ஏற்கனவே பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே உண்டு என்று **யூதர்கள்** அறிந்திருக்க வேண்டுமல்லவா !

உபா 6:4ல், இஸ்ரவேலே கேள்! நம்முடைய தேவனாகி கர்த்தர் **ஒருவரே** கர்த்தர் – Hear O Israel! The LORD our God is one LORD என்று கூறியதை விசுவாசித்து. **ஒரே தேவன்** நமக்கு உண்டு என்று அறிக்கையிடும் இஸ்வேலர் இப்போது **கிறிஸ்து, தேவ குமாரன்** என்று இன்னொரு **ஆட் தத்துவத்தை** அறிந்திருக்கிறார்களா? அவரில் தெய்வீகத்தை (DEITY) உணர்ந்து இருக்கிறார்களா? அவர்களின் அடிப்படை விசுவாத்தின் ஆதிமூலம் என்ன?

1 தீமோ. 6:16ல் சொன்னபடி தேவன் **சாவாமை** உள்ளவர்: காணக்கூடாத **ஒளியில் வாசம்** செய்கிறவர். ஒருவரும் **கண்டிராதவருமாயிருக்கிறார்**. என்பதை இஸ்ரவேலர் அறிந்திருக்கிறார்கள். அதனால்தான் மோசேயைகூட தேவனுடைய மகிமையை, முழுமயாய் காணமுடியாமல் போயிற்று. (யாத், 33:18-20)



!

கர்த்தருடைய தூதனானவரைக் கண்டே நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம் (நியா. 13:22) என்று மனோவா சொல்கிறான். ஆக **தேவனை காண முடியாது** என்றும் கர்த்தருடைய **தூதனானவரும்** தேவன்தான் என்று அந்த காலத்தில் நம்பியிருக்கின்றனர். நியா. 2:12ல் கர்த்தருடைய **தூதனானவர்** தான் கர்த்தர் என்னும் அவர் தான் நம்மை எகிப்திலிருந்து அவர்களை விடுதலையாக்கி சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுத்து நடத்தியவர் என்றும் அறிந்து இருக்கிறார்கள்.

இந்த அதிகாரத்தில் மோசே **ஒரேப்** என்னும் இடம் வந்தவுடன் ஆரம்பத்தில் **தூதன்** பேசியதைப்போல்தான் எழுதப்பட்டுள்ளது, வாசித்துப் பாருங்கள். அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்கு தரிசனமானார். அப்போது அவன் உற்றுப்பார்த்தான். அக்கினி ஜுவாலையை நெருங்கினான் என்று எழுதியிருக்கிறது. இதுவரை தூதனாக நினைத்த மோசேக்கு இப்போதுதி உண்மை விளங்கும்வண்ணம் கர்த்தர் தன்னை வெளிப்படுத்துகிறார். மோசே முட்செடியிடம் உற்றுப்பார்க்க நெருங்கி வரும்போது **கர்த்தர்** அவன் நெருங்கி வருவதைக் கண்டான் என்று எழுதியிருக்கிறது. அதன்பின்தான் மோசே தூதனாய் வந்தவர் தூதன் அல்ல, வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் என்று உணரும்படி கர்த்தர் தன்னை பகிரங்கமாக வெளிப்படுத்தி அவனிடம் பேச துடங்கினார்.

**முட்செடியில்** மோசே **முன் தூதனானவராய்** வந்தவர் (யாத். 3:2) ஆபிரகாமின் **தேவன்** ஈசாக்கின் **தேவன்,** யாக்கோபின் **தேவன்** என்றும் (யாத் 3:6) அறிந்திருக்கிறார்கள்: யாக்கோ போடே போராடிய **தூதனானவர்** கர்த்தராகிய சேனைகளின் **தேவன் யேகோவா** என்பது அவருடைய **நாமம்** என்று (ஓசி 12:4,5) அறிந்திருக்கிறார்கள், மோசேயும் அறிந்தான். அவனுக்கு பின் வந்த சந்ததியாகிய யூதர்களும் அறிந்தார்கள்.

ஆக ஆதிமுதல் **மனிதர்களோடு கலந்திருந்தவர்** ஒருவர் உண்டு என்றும் அவரும் **தேவன்தான்** என்றும் வேத வாக்கியங்களின்படியும் வாழ்க்கை நிலையிலும் இஸ்ரேலர் உணர்ந்திருக்கிறார்கள். நீதி 30:4ன்படி **தேவனும்** தேவ **குமாரனும்** இருந்தார்கள் என்று அறிகிறோம்.

உண்டாக்கிய தானி 3:25ல் **சாத்ராக்** மேஷாக் **ஆபத்நேகோ** மூனறு பேரையும் நேபுகாத்நேச்சார் **விக்கிரகத்தை** வணங்காததால் கோபங்கொண்டு அவர்களின் கை , கால்களை இருகக்கட்டி நெருப்பு சூளையில் வீசும்படி கட்டளையிட்டான். அவர்கள் நெருப்பு சூளையில் வீசப்பட்டார்கள். உயரமான காலரியில் அமர்ந்த வண்ணம் சூளைக்குள் ராஜா குனிந்து பார்க்கிறான். நான்குபேர் நெருப்பில் நிலா வெளிச்சத்தில் உலாவுவதைபோல உலாவிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது ராஜா சூளையில் தூக்கிபோட்டது 3 பேர் அல்லவா. நான்காவது ஆள் எப்படி வந்தார். அந்த நான்காவது ஆள் **தேவ புத்திரனுக்கு** ஒப்பாக இருக்கிறாரே என்றான்.

இதிலே தமிழ் வேத புத்தகத்தில் குறிப்பிட்ட வார்த்தை பல ஆங்கில மொழிபெயர்ப்பில் Son of God என்று திருயேக தெய்வத்தில் ஒருவரான தேவ குமாரனாகிய இயேசுவை குறிக்கிறது. மூல பாஷையிலும் அப்படியே குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டு காலங்களில் தூதன் என்ற பெயரில் பலரை சந்திக்கிறார் என்றும் பழைய ஏற்பாடு முழுவதும் இயேசு நீக்கமர மறைமுகமாக நிறைந்திருக்கிறார் என்பதையும் அறிய முடிகிறது.

சங். 2:7, எபி. 1:2,8,6, யோ. 3:16, மத் 16:16, ஏசா. 21:10 கொலோ 1:5,13, லூக் 8:28, ரோ. 1:5-13, 1 யோ. 4:9,10,14. மத்,. 27:40,43, லூக். 1:25, யோ. 19:7, 3:17 போன்ற பல வசனங்களை தியானித்தால் **தேவகுமாரன்** என்று ஒருவர் **பரலோகிலேயே** உண்டு என்றும் அவர் **தேவனுக்கு சமமானவர்** என்றும் பிலி. 2:6,

யோ. 1:1, இஸ்ரேல் மக்கள் அறிந்திருக்கிறார்கள். அந்த **தேவ குமாரன்** பூமிக்கு வருவார் என்றும் அவர் **இராஜாவாக இருப்பார்** என்றும் ஏசா. 9:6,7 -14 லூக். 1:32,33 ஏசா. 23:5,6, அப். 15:17, சகா. 9:9 மத். 21:9, காத்திருந்தார்கள். அதனால்தான் யோவான் ஸ்நானகனே வருகிறவர். **என்று சொல்லப்படுகிறவர் நீர்தானா?** (மத். 11:3) என்று கேட்கிறான். பிரதான ஆசாரியரும் நீர் **தேவனுடைய குமாரன்தானா?** என்று கேட்கிறான். மத். 26:53, பிசாசும் **இயேசுவை தேவனுடைய குமாரன்** என்றே அறிக்கையிடுகிறது. லூக் 8:28.

மட்டுமல்ல **கிறிஸ்து** என்பது **கிரேக்க வார்த்தை மேசியா** என்பது **எபிரேய** வார்த்தை . **கிறிஸ்து** என்றால் **வரப்போகிறவர்** அபிஷேகம் பண்ணபட்டவர் என்று பொருள். ஆதியிலேயே **வார்த்தையாய் இருந்து அதன் பின் தேவ குமாரனாய்** பரலோகில் இருந்தவர்தான் கி**றிஸ்து** என்றும் **அவர் வருவார் என்றும்** யூதர்களுக்கு தெரிந்திருக்கிறது. யோ. 9:22, 10:24, மத், 26:63, மாற். 14:61, லூக் 4:41, யோ. 12:34 அப். 2:36, குறப்பிட்ட இந்த பல வசனங்களின் படி **தேவ குமாரன்தான் கிறிஸ்து** என்றும் **மேசியா** என்றும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். மார்த்தாளும், சமாரியா ஸ்திரியும்கூட **கிறிஸ்து வருவார்** என்று விசுவாசித்திருக்கிறார்கள், யோ. 11:27, 4:25,26 **வரப்போகிற கிறிஸ்துவாகிய மேசியா** பாடுகள் படுவார் என்றும். **சங்கரிப்படுவார்** என்றும **மூன்றாம் நாள்** உயிர்ப்பார் என்றும் வேதம் அவர்களுக்கு சொல்லியிருக்கிறது. ஏசா 53: தானி 9:26, லேவி 23:5-11, சங் 118:22-24 ஏசா. 25:8 சக. 3:14 ஆனாலும் மேசியா நிச்சயமாக ராஜாவாய்த்தான் இருப்பார் என்றுதான் அதிகமதிகமாய் நம்பியிருந்தனர். **அடிமைத்தனத்தில்** கிடந்தவர்கள். **ஆட்சி அதிகாரம்** வேண்டும் என்பதில்தான் கவனமாக இருந்தார்கள். எனவே அவர் **பிரபுக்கள்** வழியில் வருவார் என்றும் **தச்சன்** மகனாய் வரமாட்டார் என்றும் நம்பியிருந்தனர். அவர்களின் மனக்கண்களை பிசாசு குருடாக்கியிருந்தான். **இரத்தம் சிந்தி** இரட்சிப்பு அளிக்கும் **இரட்சகராய்** வருவார் என்ற விசுவாசத்தை பிசாசு கெடுத்துப்போட்டான். அதனாலேயே இயேசுவை யார் என்று அறியாமலே **சிலுவையில் அறைந்து** கொன்றார்கள். அதனால்தான் யூதர்கள் **மேசியா** என்ற **தேவ குமாரன்** வருவார் என்றும் இராஜ்யத்தை ஆளத்தருவார் என்றும் **இன்றுவரை நம்பிக்கை கொண்டு** எருசலேமிலுள்ள பழைய ஆலயத்தின் சுவர்களின் ஒரு பகுதியான **அழுகையின் சுவரில்** Weeping Wallலில் **முட்டிகொள்ளுகிறார்கள்,** அவர்களுக்கு மேசியா வருவார் என்ற விசுவாசம் இன்னும் இருக்கிறது. அதனால்தான் அவர்கள் **அறியாமல் செய்கிறார்கள்** என்று இயேசு சிலுவையில் அறையப்பட்ட நிலையில் சொன்னார்.

**இப்படிப்பட்டவர்களின்** மத்தியில் **பேதுரு சொன்னது** நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த **இயேசுவை நம்முடைய தேவன்** ஆண்டவரும் **கிறிஸ்துவுமாக்கினார்** என்று இஸ்ரேல் குடும்பத்தார் யாவரும் அறியக்கடவர்கள் என்றான். (அப். 2:36, பவுலும் வெளியரங்கமாய் **யூதர்களுடனே** பலமாய் தர்க்கம் பண்ணி **இயேசுவே கிறிஸ்து** என்றும் **இயேசுவே தேவ குமாரன்** எனறும் வேத **வாக்கியங்களைக்கொண்டு** திருஷ்டாந்தமாக்கினார். (அப். 18:28, 9:20,) ஆக **தேவனுடைய வார்த்தைதான்** தேவ **குமாரனாய்** வரப்போகிற **கிறிஸ்துவாய் பரலோகில் இருந்தார்** என்று இஸ்ரேலர் எல்லோரும் நம்பி இருந்தனர் என்பது வெள்ளிப்படையாக அறிய முடிகிறது. இதனால்தான் **கிறிஸ்துவினிமினித்தம்** அதாவது வரப்போகிற **வார்த்தையினிமித்தம்** (மேசியாவிநிமித்தம்) வரும் நிந்தையை **அதிக பாக்கியம்** என மோசே அன்றே எண்ணினான் என்று எபி, 11:26ல் சொல்கிறது. இந்த இயேசுவை **தேவ குமாரனாக** கிறிஸ்துவாக, **தேவ வார்த்தையாக** தேவனாக, **ஆண்டவராக** பிதாவுக்கு **சமமானவராக வேத வாக்கியங்கள் மூலம் வெளிப்படுத்தி அவரால்தான் அவரின் மரணத்தால்தான் இரட்சிப்பு மனுக்குலத்திற்கு** வந்திருக்கிறது என்று ஆதி அப்போதலருக்கு பிரசங்கித்தார்கள். அதனால்தான் பேதுரு பிரசங்கித்தபோது 3000 பேர் என்று 5000 பேர் என்று இஸ்ரேலர் பலர் **இரட்சிப்புக்குள்** வந்தனர். அவரின் நாமம், வல்லமை, **அதிகாரம், மகிமை, மாட்சிமை, அன்பு**

எல்லாமே இஸ்ரேலருக்குள் மட்டுமல்லாது, **புற ஜாதிகளுக்குள்ளும் பிரஸ்தாபப்பட்டது**. இயேசுவின் முதலாம் வருகையிலேயே **இரட்சிப்பு,** இரண்டாம் வருகையிலே **யூதர்களுக்கு இராஜ்ஜியமும்** கிடைக்கும் என்றும், அறியிட்டு, உறுதியிட்டு சொல்லி, அவர்களுக்கு ஆவியானவரின் உதவியால் **விசுவாசத்தை ஊட்டினார்கள்,** தாங்கள் **இரத்தத் சாட்சியாய்** மரித்தாலும் பரவாயில்லை, **தங்களுக்காக இரத்தம் சிந்திய** பிதாவின் குமாரனை **மகிமைப்படுத்த வேண்டும்** என்ற ஒரே வாஞ்ஜையோடு அந்த அப்போஸ்தலர்கள் **வாழ்நாளெல்லாம் செலவழித்தார்கள்.** இதை வாசிக்கும் நீங்கள் வாழ்ந்திருக்கிறீர்கள்? உங்களை நீங்களே நிதானித்து பாருங்கள்.

அன்பானவர்களே,

இந்த காலம் **கடைசி காலம் என்கிறோம். இயேசு சீக்கிரம் வரப்போகிறார்** என்கிறோம். ஆனால் **ஆதி அப்போஸ்தலர் காலத்தில் நடந்ததுபோல** Signs & Wonders **அதிசயங்களும், அடையாளங்களும், ஆச்சரியங்களும் நடக்கவில்லையே ஏன்? (மாற் 16:20) சபைகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகின்றன. ஆனா**ல் **இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள்** பெருகவில்லையே ஏன்? ஆத்துமாக்கள் சபையைவிட்டு பிரிந்துபோகிறார்களேஒழிய பெருகிப்போகவில்லை. **புத்தாண்டும்** கொண்டாடுகிறார்கள். **வாக்குத்தத்த அட்டையும்** கொடுக்கிறார்கள் (வசனத்தின்படி வாழாத கிறிஸ்தவர்ளுக்கு நிச்சயமாக நிறைவேறாது) இந்த 2020ம் ஆண்டும் **ஆத்தும ஆதாயத்தில்** ஆவிக்குரிய வளர்ச்சியில் **வசனம் உறுதிப்படத்தப்படும்.**

அதிசயங்கள் நடக்கும் காரியங்களில் 2019ம் ஆண்டு போலத்தான் இருக்குமா?

**பிள்ளை கொடும்! இல்லையேல் சாகிறேன் என்ற ராகேலின் உள்ளம் கொண்ட ஊழியர்கள் எழும்பமாட்டார்களா?**

**அறியாமைப் பிசாசையும்,கீழ்படியாமை பிசாசையும் துரத்தியடிக்கும் விசுவாச வீரர்கள் கிளம்ப மாட்டார்களா?**

**கர்த்தரின் சத்தியம் வெளிச்சமாய் அவர்களுக்கு காணப்படாதா?**

இயேசு கிறிஸ்து சொன்னார். **என்னிலும் மேலான காரியங்களை செய்வீர்கள்**.என்றார். (யோ 14:12). **இயேசு மரித்தவர்களை எழுப்பினார். பிறவிக் குருடர்களை, சப்பாணிகளை, செவிடர்களை குணமாக்கினார். குஷ்டரோகிகளை குணமாக்கினார். கடல்மேல் நடந்தார், தண்ணீரை திராட்ச ரசமாய் மாற்றினார். 5 அப்பம், 2 மீனை** 5000 புருஷர்களுக்கு கொடுத்தார். **மீனின் வாயிலிருந்து பணத்தை வரவழைத்தார்.** இதற்கு மேலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய இரட்சிக்கப்பட்டவர்கள் செய்வார்கள் என்று சொல்லிவிட்டு போனார். (யோ. 14:12) இந்த செய்தியை வாசிக்கிறவர்கள் எத்தனை பேரை உயிரோடு எழுப்பிருக்கிறீர்கள்?

நீங்கள் எத்தனை பிறவிக் குருடர்களுக்கு பார்வை அளித்திருக்கிறீர்கள். விரல் விட்டு சொல்ல முடியுமா?

எத்தனையோ பேர்களுக்கு கண்ணீர்விட்டு ஜெபித்தேன், தலையிலே கையை வைத்து ஜெபித்தேன், **மனதுருகி** ஊக்கமாய் ஜெபித்தேன், எத்தனையோ **வியாதிகள்** சுகமாயின என்று **ஊழியர்களாகிய உங்களில் சிலர்** சொல்ல நினைப்பது புரிகிறது. **ஜெபத்தால் சுகமாவது அற்புதமுமல்ல, அதிசயமுமல்ல, அடையாளமுமல்ல, ஆச்சரியமுமல்ல** நீ வருந்தி கண்ணீர்மல்க அழுது ஜெபிப்பதைக்கண்டு உனக்கு எதிரே உள்ள வியாதிப்பட்டவரும் அதே நிலையில் இருப்பதையும் கண்டு ஆண்டவர் காட்டும் **இரக்கம் அது**! **கிரியை** அது ! இன்னும் சொல்லப்போனால் அது பிச்சை போன்றதாகும். என் ஜெபத்தால் வியாதிபட்டவருக்கு கிடைத்த **விசுவாசத்தின் அளவுபடி** பெறுகிற காரியம் அது. **இயேசு கிறிஸ்து** தம்முடைய ஊழியத்தில் என்றாவது **ஜெபித்து அற்புதம்**

**அடையாளங்கள்** செய்தாரா? சிந்தியுங்கள்.

அவர் சொன்னார். **அப்படியே ஆயிற்று.**

கட்டளையிட்டார், **அது ஆயிற்று**

தொட்டார் **சுகம் ஆயிற்று, வியாதி விலகிற்று,**

இவைகளைவிட **மேலான காரியங்களை** அவரைப்போல் செய்ய விசுவாசித்து **செயல்படுங்கள், இன்றைக்கு தேதியில் ஜெபித்து சுகம் கிடைப்பதே குணமாக்கும் வரம் என்று சொல்லித்திரிகிற ஊழியக்காரர்கள். விசுவாசிகள் உண்டே.**

- ☐ பெங்களூர் **பாஸ்டர் பால் தங்கையா** அவர்கள் வெள்ளை பேப்பரை ரூபாய் நோட்டாக மாற்றும், தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றும் ஒருவரை ஊழியக்காரன் என்ற பெயரில் ஒரு மேஜிக் செய்யும் ஆளை அழைத்து வந்து இயேசுவின் அற்புதம் என்று அறிமுகப்படுத்தினார். தண்ணீர் திராட்சை ரசமாக மாறவில்லை, ஆனால் திராட்சைரச ருசி இருந்தததை தெரிவித்ன் சபை மக்களுக்கு குடிக்க கொடுத்தார். தண்ணீர் தண்ணீராகவே இருந்தது. வெள்ளைதாள் ரூபாய் நோட்டாக மாற்றுவதும், வங்கி கணக்கில் ரூபாய் எண்ணிக்கை அதிகமாவதும் உண்மையில் நடக்கவில்லை. வீதி ஓரத்தில் மோடி வித்தை காட்டும் மந்திரவாதியும் அப்படியே செய்தானே.
- ☐ பாஸ்டர் பால் தங்கையா கைகளில் 5 விரல்களிலும் தங்க மோதிரம் அணிந்து பாடல் ஒளி பதிவுக்கும் சபை ஆராதனையிலும் 5 விரல்களை காட்டியும், ஆட்டியும் பிரசங்கம் செய்வதால் இவர் தன் சபை மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறார். இவரையும் உணமையான பாஸ்டர் என்று நம்பி ஆராதனைக்கு கியூவில் நிற்கிறார்களே. அவர்களுக்கெல்லாம் மூளை மங்கி போனதா TVயிலும் Utube லும் காணும் மக்கள் இப்படிப்பட்ட ஊழியத்தை கண்டு வெட்கி தலை குனிகிறார்கள். ஆனால் அந்த சபைக்கு போகிறவர்களுக்கு ஒரு உணர்வும் ஏற்பட வில்லையே ? பெந்தேகோஸ்தே சபைகளின் நிலையை இப்போதாவது புரிந்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த கடைசி காலத்தில் **அறிவு பெருகி** போய்விட்டது. (தானி 12:4) **வயிற்றுவலி,** தலைவலி, **கற்பபை கட்டி,** இதய குழாய் அடைப்பு, இருதயம், கிட்னி மாற்றுதல் போன்ற காரியங்களில் கிடைக்கும் சுகமெல்லாம் ஆஸ்பத்திரிகளில் சர்வ சாதாரணமாகிவிட்டது. இப்படிப்பட்ட காரியங்கள் நம் ஊழியங்களில் நடந்தாலும்கூட, மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியிலே இவைகளை மக்கள் காண்பதாகும், **உயிர்தெழுந்த ஆண்டவரை விசுவாசிக்கும் மக்கள் அதிகம் இல்லை. இயற்கைக்கு அற்பாற்பட்ட** காரியங்கள் நடக்கும்போதுதான் இப்போதைய **உலகம் நம்ப வாய்ப்பிருக்கிறது**. இதைத்தான் **அதிசயங்கள் , ஆச்சரியங்கள்** என்கிறோம். மருத்துவத்தால குணமாக்க முடியாத **கேன்சர்,** கிட்னி தோல்வி, (Failure) **ஹார்ட் அட்டாக்,** எய்ட்ஸ், முற்றிப்போன **சர்க்கரை வியாதி,** தினம் தினமும் உதிக்கும் **புதிய நோய்கள்,** மருந்தே இல்லாத **வியாதிகள், மரணம்,** பிசாசின்பிடி (ஆவி, ஆத்துமாவில்) போன்றவைகளிலிருந்து நடக்கும் **விடுதலையை பார்க்கும்போதுதான்** உலகமே ஆச்சரியப்பட்டு **இயேசுவை ஏற்றுக்கொள்ளும்.** மற்றபடி **மருத்துவத்துக்கு** உட்பட்ட வியாதிகளின் விடுதலையை, ஏழைகள் **பாமர மக்கள்** வேண்டுமானால் விசுவாசிக்க வாய்ப்பு உண்டு. இதுவும் கூட நிரந்தரமாய் இருக்க வாய்ப்பில்லை.

உலகத்திற்கு உட்பட்ட காரியங்கள் நடக்கத்தான் வரங்கள் தேவைப்படுகின்றன. (1 கொரி. 12:8-10) இந்த வரங்களை ஆவியானவர் தம்முடைய சித்தப்படி பகிர்ந்து கொடுக்கிறார். (1 கொரி. 12:11) இது நம்முடைய விசுவாசத்திலும், பரிசுத்தத்தாலும் கிடைப்பது அல்ல. நமக்கு **வாஞ்சை இருந்தால் தேவனுக்கு, சித்தமானால்** இது

நடக்கும். மற்றபடி **அதிசயங்களும்** ஆச்சரியங்களும் **அடையாளங்களும்** நடக்க வேண்டுமானால் அதாவது **உலக ஞானத்திற்கு அப்பாற்பட்ட காரியங்கள்** நடக்க வேண்டுமானால், **வரங்கள்** போதாது.! இயேசு **கிறிஸ்துவால்** ஆவியானவரைக்கொண்டு அவைகள் கொடுக்கப்படும் வரமும் அடையாளங்களும் மேலே சொல்லப்பட்ட அனுபவம்தான் இது என்றும் இதைதான் **ஆதி அப்போஸ்தலர்கள் பெற்றார்கள்** என்றும் பேதுரு அப் 2:16ல் கூறுகிறார். இந்த **அனுபவம் நமக்கும் உண்டு** என்கிறார். (அப். 2:39)

இரட்சிக்கப்பட்டபின் சாட்சியின் அனுபவத்தோடு பெறும் **பரிசுத்தாவியின் நிறைவின் வல்லமைதான்** இயற்கைக்கு **அப்பாற்பட்ட காரியங்களை** செய்ய வைக்கிறது.

இந்த அபிஷேகத்தை பெற்றுவிட்டால் **ஆதி அப்போஸ்தலர்கள்** போல 2020ம் ஆண்டிலே **உலகத்தை நம்மால் கலக்க முடியும்.** ஆத்தும ஆதாயம் **பெருக்க முடியும்**. பிசாசின் கோட்டையை **உடைக்கமுடியும்**. அப்போதுதான் **இயேசுவின் இரண்டாம் வருகையும்** சீக்கிரமாக சம்பவிக்க முடியும். இந்த அபிஷேகம் ஆவியானவரின் சித்தப்படி வாஞ்ஜையுமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும். வரங்களை பெற வாஞ்ஜிக்காவிட்டாலும் இந்த கடைசி நாட்களில் ஆவிக்குரிய தேவையை உணர்ந்து, ஜெபிப்பவரின் அனுபவம் ஆவியானவர்

(1) **நம்மோடு**, (2) நமக்குள், (3) **நம்மேல்** (upon us) என்ற மூன்றிலே உள்ள **3வித அனுபவமாகும்**. இந்த அனுபவம் பழைய ஏற்பாட்டில் மரியாள், தாவீது, **சிமியோன்** 70 இஸ்ரேலர். (லூ, 1:35, 2:25, எண். 11:25) போன்ற பலருக்கு அன்றைய காலத்தில் தேவைக்கேற்றபடி இருந்தது. ஆனால் **நமக்கோ புதிய ஏற்பாட்டு சபை மக்களுக்கோ நிரந்தரமாக இருக்கும்.**

இதற்கு **தேவனிடமிருந்து** விஷேசமான **வல்லமை**, மகிமை, **மகத்துவம்**, மாட்சிமை, **ஞானம், அதிகாரம்** போன்ற எல்லாம் தேவை (மத். 17:21) இந்த அபிஷேகத்தை பெறுவதற்கு **இரட்சிக்கப்பட்டால் மட்டும்** போதாது. **பரிசுத்தமான சாட்சியுள்ள,** வாழ்க்கையோடு, **ஆவியின் கனி,** வசனத் தெளிவு, தேவ ஞானம், தேவ பிரசன்னம், வசனம், விசுவாச அறிக்கை போன்றவை மிகவும் தேவை,

இவைகள் எல்லாமே ஒன்றும் குறையாமல் **இயேசுவிடம் இருந்தன.** ஆதி **அப்போஸ்தலரிடமும் இருந்தன.** அதனால்தான் அவர்கள் அபிஷேகம் நிறைந்தவர்களாய் அதிசயங்களையும், **அடையாளங்களையும்** செய்தார்கள்.

**நிழல் பட்டால்** சுகம்,
**வஸ்திரம் தொட்டால்** சுகம்,
**மரித்தோர்** உயிர்தெழுதல்,
சர்பம் கடித்தும் ஜெயம். எல்லாம் நடந்தது.

இன்று பல இடத்தில் **நட்சத்திர ஊழியர்கள்** லட்சக் கணக்கில் பணம் செலவழித்து **அக்கினி** பெருவிழா, **அக்கினி** முகாம் என்று நடத்தி என்ன பலன்கள் உண்டாயிருக்கின்றன? **நடத்துபவர்களுக்கு** பெரும் புகழும், **ஊழியர்** – விசுவாசிகள் மத்தியில் உண்டாகின்றது, அவ்வளவுதான். மற்றபடி **அக்கினி ஞானஸ்நானம்** ஆவியானவரின் நிறைவைப்பற்றிய **வசன தெளிவு** அவர்களுக்கு இல்லாததால் ஏதோ **ஆடிப்பாடி அன்னிய பாஷைகளை பேசி**, காலத்தையும், **உடல் பலத்தையும்,** பணத்தையும் வீணாக்குகிறார்கள். **வசனத்தெளிவு** பெற ஆவியானவருக்கு இடம் கொடு. **ஆவியானவர் மூலமாக** உன் அதிசயங்களையும் அடையாளங்களையும் செயல்பட வாஞ்சி. வெறுமனே **நிரப்புங்கப்பா, நிரப்புங்கப்பா** ஆராதனை அராதனை என்று பாடிப் பாடியே வீனாய் **நாட்களை கழிக்காதே,** இது கடைசி காலம்.

**கேள்வி : தேவ தூதர்கள்** பெண்களோடு உடலுறவு கொள்வதும் அதன் மூலம் குழந்தைகளும் பிறந்தது (ஆதி. 6:1,2) இப்படிப் **பிறந்தவர்கள்தான்** இராட்சதர்களா? அப்படியானால் **சாத்தானால்** ஏவாளுக்குப் பிறந்தவன்தான் காயீனா? (1 யோ. 3:12) விலக்கப்பட்ட கனியை புசித்ததால் இப்படி இப்படி நடந்ததா?

**பதில் :** ஆதி.6:1,2ல் தேவ தூதர்கள் (Angels) என்றே இல்லை. தேவ புத்திரர்கள் (Sons of God) என்று தான் உள்ளது. **தேவ புத்திரர்கள்** என்றால் நம்மைப்போல **தேவனை ஏற்றுக்கொண்டு** இரட்சிக்கப்பட்ட **விசுவாசிகள்** என்று பொருள். (யோ. 1:12, ரோ. 8:14) இவர்கள் **உலக பிரகாரமான மனுஷ குமார்த்திகளை** திருமணம் செய்து **பிள்ளைகளை பெற்றார்கள்** என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்டதான **அந்நிய நுகப்பிணைப்பு** என்றுமே தேவனுக்கு பிடிக்காத ஒன்று. (2 கொரி. 6:14-18)

ஆனால் **தேவ தூதர்கள்** என்பவர்கள் **ஆணுமில்லை, பெண்ணுமில்லை,**. அவர்களுக்கு கொள்வினையும் இலலை, கொடுப்பினையும் இல்லை. அவர்கள் **பலுகிப்பெருக** அவர்களுக்கு அதிகாரமும் இல்லை. சரிரம் இல்லை அவர்கள் **ஆவியாய்** இருக்கிறார்கள். (மத். 2:30, ஆதி 1:28) **ஆவியாய்** தேவனில் **சாயலிலும், ரூபத்திலும்** படைக்கப்பட்ட **ஆதாமும் ஏவாளும்** (ஆதி. 1:26) பலுகிப்பெருக வேணுமானால் **சரீரம் தேவை** என்பதால் தானே கர்த்தர் **சரீரம் தந்தார்.** சரீரமே இல்லாத Embodied Spirits எப்படி **சரீரத்தோடு** உடலுறவு கொள்ளும் ? சிந்தியுங்கள். அப்படியானால் **குழந்தையில்லாத பெண்கள்கூட,** இப்படிப்பட்ட தேவ தூதர்களுடன் உடலுறவு கொண்டு பிள்ளைகளை பெற்றுக்கொள்ளலாமே !

மேலும் ஆதி. 6:4ஐ வாசித்தால் **இராட்சதர்கள்** தேவ தூதர்களுக்கும் **பெண்களுக்கும் பிறந்தவர்கள் அல்ல** என்றும் , அந்நிய **நுகப்பிணைப்பில்** பிறந்த பிள்ளைகளும் **இராட்சதர் போல** பலவான்களாய் இருந்தார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மருத்துவ விஞ்ஞானப்படி ஆண் = பெண்ணின் **ஜீன்ஸ்** மற்றும் பரம்பரை இவைகளை பொறுத்து ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்தது சில சரீரம் சற்று **விகாரமாய், விநோதமாய்** காணப்படுபவர்கள்தான் **இராட்சதர்கள். கோலியாத்தும்** இராட்சதன்தான்.

ஆக. **ஆவியாயிருக்கிற** சாத்தான் மகிமையிலிருக்கும் **சரீரமுடைய ஏவாளோடு** உடலுறவுகொள்ள முடியாது என்று அறிகிறோம். இப்படி கர்ப்பமாகி பிறந்தவன் காயீன் என்றும் இதுதான் விலக்கப்பட்ட கனியை புசித்ததால்தான் இப்படி நடந்தது **என்பவர்களை நம்பாதீர்கள்** ஆதி 4:1ஐ வாசித்தால் **ஆதாமுக்கும் ஏவாளுக்கும்** பிறந்தவன்தான **காயின்.** பிசாசினால் உண்டானவன் அல்ல என்று அறிகிறோம் . 1 யோ. 3:12 ல் எழுதிய வனத்தை வைத்து **காயின்** பிசாசினால் உண்டானவன் என்று அவர் சொன்னால் யோ. 8:44ல் **யூதர்களை** பார்த்து இயேசு, நீங்கள் **உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்** என்று சொன்னதால் அந்த **யூதர்கள்** எல்லாரும் **மனுஷிக** அப்பாக்களுக்கு பிறக்காமல் **பிசாசுக்கு பிறந்தவர்களா?** சிந்தியுங்கள். தேவ வசனத்திற்கு செவி கொடாதவர் எல்லோரும் மறுபடியும் பிறவாதவன். அல்லது இரட்சிக்கப்படாதவனாகும். (யோ. 3:3,5) அப்படிப்பட்டவர்கள் பரிசுத்த ஆவியால் பிறவாமல் **பிசாசினால்** பிறந்திருக்கிறார்கள் என்று அர்த்தம் இது. **மனுஷிக பிறப்பல்ல.** ஆவிக்குரிய பிறப்பு இப்படிப்பட்ட பிறவியை உடையவன்தான் காயின் என்று 1 யோ. 3:12 சொல்லுகிறது.

**கேள்வி :** மத் 3:16 **வானம் திறக்கப்பட்டது** என்றால் அர்த்தம் என்ன ?

**பதில் :** ஆங்கிலத்தில **வானங்கள்** என்று உள்ளது. **பரலோகம்** திறக்கப்பட்டது. ஆவியானவர் **புறா** வடிவத்தில அங்கிருந்து வருவதை இயேசு கண்டார். **யோவான் ஸ்நாநகன்.** அந்த புறா **இயேசுவின்மேல் தங்குவதை** கண்டான். **எசேக்கியேல், யோவான், ஸ்தேவான் போன்றோருக்கு தரிசனத்தில் தான் வானம் திறக்கிறது.** (எசே. 1:1, வெளி 4:1, அப், 7:55,56) ஆனால் **இயேசுவோ நேரடியாகவே கண்டார்.**

**கேள்வி :** பரிசேயர், சதுசேயர், ஆயக்காரர், மாயக்காரர் இவர்கள் யார் ?

**பதில்** : 1) பரிசேயரும், சதுசேயரும் வேத அறிஞர்கள்.

**2) உயிர்தெழுதலும், தேவ தூதர்களும்** இல்லை என்று சொல்பவர்கள்தான் **சதுசேயர்,**

3) மக்களிடமிருந்து அடாவடியாக பணம் வசூலித்து ரோம சர்க்காருக்கு கொடுப்பவர்கள்தான் **ஆயக்காரர்கள்.**

4) பக்தியுள்ளவர்கள்போல் நடித்து வேதத்திற்கு புறம்பாய் நடப்பவர்கள் **மாயக்காரர்கள்.**

**கேள்வி :–** மத் 7:13 **இடுக்கமான வாசல்** விளக்கவும்.

**பதில் :** மத் 7:12 **வசனத்தின்படி நடக்க விருப்பம் இல்லாது இருப்பவர்களுக்கு** ஜீவனுக்கு போகிற வாசல் **இடுக்காய், குறுக்கலாய்,** கஷ்டமானதாய் இருக்கும். மற்றப்படி இயேசுவின் வார்த்தையால் நடத்தப்படுபவர்களுக்கு இதே **இடுக்கமான வழி** சந்தோஷமும், சமாதானமாய் இருக்கும். உலகத்தாருக்கு, கேட்டுக்கு, அழிவுக்கு போகிற வாசல் **விரிவாயும்** விசாலமாயும் தோன்றும் **முடிவோ மரணம்.**

**கேள்வி :** லேவி 13:46 குஷ்டரோகியின் குடியிருப்பு பாளயத்துக்கு புறம்பே இருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. ஆனால் 2 ராஜா 5ல் **நாகமான்** நகரத்தில் வாசம் செய்தான் என்று காணப்படுகிறதே ஏன் ?

**பதில் :** லேவி 3:16 **நியாயபிரமான சட்டம்** இஸ்ரேலருக்குதான், **சீரிய தேசத்துக்கு** அந்த சட்டம் இல்லை. **நாகமான்** சீரிய தேசத்து தளபதி ஆகும்.

**கேள்வி :** ஆதி 8:21ல் இனி **ஜலப்பிரலயத்தால்** சங்கரிப்பதில்லை என்கிறார் தேவன். மத். 24:37ல் அப்படியே **மனுஷ குமாரன் வரும் காலத்திலும்** நடக்கும் என்றும் எழுதியுள்ளதே இது முரன்பாடல்லவா?

**பதில் :** மத். 24:37ல் **வெள்ளத்தால்** உலகத்தை அழிப்பேன் என்று சொல்லவில்லை, மத் ,24:38,39யும் வாசியுங்கள். **நோவா** காலத்தில் ஜனங்கள் புசித்தும், குடித்தும் பெண் கொண்டும் பாவ உணர்வின்றி வாழ்ந்ததுபோல மனுஷ குமாரனின் வருகையின் போது மக்கள் **ஒழுக்கமின்றி** வாழ்ந்தவர்கள் என்றுதான் சொல்கிறார். மற்றபடி இந்த பூமி இனி **அக்கினியால்தான்** அழியுமே ஒழிய ஜல **பிரலாயத்தால்** அழியாது. (2 பேது 3:7)

**கேள்வி :** ஆதி 11:39ன் படி **சாராய்**, தோராகுவின் **மருமகள்** ஆதி 20:12ன்படி **ஆபிரகாமின் தகப்பன் தோராவுக்கு பிறந்தவள் சாராள்,** அப்படியானால் **சாராள் தாயார் யார்? அபிரகாம் தாய் யார்?**

**பதில் : தோராகுக்கு இரண்டு மனைவிகள் அதில் ஒரு மனைவிக்கு** ஆபிரகாமும் இன்னொரு மனைவிக்கு **சாராயும்** பிறந்திருக்கிறார்கள். **மனைவிகள்** பெயர்கள் வேதத்தில் எழுதப்படவில்லை.

**கேள்வி :** ஆதி 21:16,18 ஆகாரின் மகன் **விருத்தசேதனம்** பண்ணப்பட்ட போது வயது 13 என்றால் அன்று அந்த சம்பவத்தின்போது வயது 18 இருக்கையில், அவனை **பிள்ளை** என்று எப்படி சொல்ல முடியும்.

**பதில் :** ஆதி. 21:16-18ல் அப்போது இஸ்மவேலின் வயது 18 அல்ல 19 இருக்கும் ஆபிரகாமின் 86வது வயதில் இஸ்மவேல் பிறந்தான். (ஆதி 16:16)ன்படி. ஆபிரகாமின் 100வது வயதில் **ஈசாக்கு** பிறந்தான். அதன்பின் **ஈசாக்கு** பால்குடி மறந்தபிறகுதான் ஆகாரும் இஸ்மவேலும் விரட்டப்பட்டார்கள். ஆதி 21:8-10) ஆக அப்போது கிட்டத்தட்ட 18 அல்லது 19 இருக்கும் இஸ்ரேல் நாட்டில் **20 வயதுக்கு உட்பட்டவர்கள் எல்லாம் சிறுவர்கள். பிள்ளைகள்** என்றுதான் கருதப்பட்டது. (யாத் 30 :14. எண். 1:45, 14:29,. 30:12)

**கேள்வி:–** தாவீது **ஈசாக்கு** எத்தனையாவது குமாரன் ?

**பதில் :** 1 சாமு 16:10ன்படி அவன் **8வது மகன்தான்.** நாளாகமத்தில் அதைப்பற்றி எழுதும்போது **புத்திரபாக்கியம் இல்லாதவர்களை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.** ஈசாயின் **7வது மகன்** புத்திர பாக்கியம் அற்றவனாய் இருந்ததால் அவனை விட்டுவிட்டு 7 வது மகன் **தாவீது** என்று 1 நாளா 2:15ல் எழுதப்பட்டுள்ளது.

**கேள்வி :–** கர்த்தர் ஏன் **வெண்கலப் சர்ப்பத்தை** பார்க்க சொன்னார் ? (எண். 21:8-10)

**பதில் :** வேதத்தில் **பொன்** தெய்வீகத்தையும் **வெண்கலம் சாத்தானிசத்ததையும்** குறிக்கிறுது. சர்பம் கடித்து மாண்டவர்கள் **வெண்கலத்தில்** செய்யப்பட்ட சர்பத்தை நோக்கி பார்த்து பிழைக்க வழிவகை செய்தார். இது இயேசுவுக்கு நிழலாட்டம். யோ. 3:14,15ஐ வாசியுங்கள. நமது **பாவங்களால்** இயேசு **வெண்கல** சர்பமாகி சிலுவையில் உயர்த்தப்பட்டார். இதற்கு நிழலாட்டம் அது.

**கேள்வி :–** சாமு 28:13, 14 **தேவர்கள்** பூமிக்குள் இருந்து ஏறி வருகிறதை காண்கிறேன் என்றல் என்ன ?


**பதில் : பூமிக்குள்** இருக்கும் **பாதாளம்** பரதேசியிலிருந்து **அஞ்சனக்காரி,** தன் கைவசமுள்ள பொல்லாத (பிசாசின்) ஆவியைக் கொண்டு சாமுவேலை எழுப்பியதாக காட்டியதால் அங்கிருந்தவர்கள் ஏறி வருவதை காண்பதாக போடப்பட்டுள்ளது. **எழுப்ப வேண்டியது சாமுவேலை மட்டுமே.** ஆனால் இங்கு **தேவர்கள்** என்ற பெயரில் **பலர் எழும்பி வருகிறார்கள்.** என்று சொல்வதே அந்த பிசாசு முதலில் கூறிய **பொய்** ஆகும். மரித்துப்போன யாரையும் எழுப்ப **அஞ்சனக்காரிக்கு** மட்டுமல்ல **ஒருவருக்கும் அதிகாரம்** இல்லை. இப்படியாய் எழும்பி வருதாய் தன் கைவாசமுள்ள **பொல்லாத ஆவியை** வைத்து **மாய்மாலம்** செய்கிறாள். இந்த அஞ்சனக்காரி பார்த்ததாக கூறும். **ஏறிவரும் ஆவியை** சவுல்கூட பார்க்கவில்லை. அதையும் நீங்கள் கவனக்கவேண்டும்.

**கேள்வி :–** ஆண்டவருடைய **பிரதான தூதன் கேரூப்** பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டபின் அவனுக்குபின் இப்பேது ஆண்டவருக்கு பிரதான தூதன் யார்?

**பதில் :** தள்ளப்பட்டவன் பெயர் **கேரூப்** அல்லது **லூசிபர்** (ஏசா 14:2 in English) இவன் **பிரதான தூதனல்ல. பிரதான தூதன் இன்றைக்கு மிகாவேல்** தான் (தானி 12:1)

**கேள்வி :–** பரலோக அரசின் சூழ்நிலை எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது. (கேரூபின் சேராபீன் பிரதான தூதர்கள் 24 மூப்பர்கள் நிலை எப்படி அமைந்துள்ளது. யேவான் கண்ட தரிசனம் பற்றிவும் கூறுங்கள் ?

பதில் : 24 மூப்பர்கள் என்பது **இரகசிய வருகையில்** செல்லும் நம்மவர்கள்தான், இப்போது அவர்கள் பரலோகில் இல்லை. சேராபின் கேரூபின் எல்லாம் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக பாதுகாப்பின் தூதர்களாய் செயல்படுகிறார்கள். மற்றபடி காபிரியேல் மிகாவேல் போன்ற தூதர்கள்ளெல்லாம் , ஆண்டவர் **ஏவு பணிகளை** செய்பவர்களாக உள்ளனர். வெளி 4,5ம் அதிகாரங்களில் இவைகளை கணலாம். மொத்தத்தில் **நாம் பரலோகம்** போனால்தான் நேரடியாய் இவைகளை பற்றியெல்லாம் காணலாம். வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் கண்டது. **இரகசிய வருகைக்கு** பின் பரலோகில் நடக்கப்போவதை பற்றிய தரிசனம் மட்டுமே.



# வைத்தியர்களின் அடையாளம்
அல்லது
# மருத்துவ சின்னம்



**குறிப்பு :–** சாதாரணமாக டாக்டர்களின் கார்களில் மேலே படத்தில் காணப்படுவதைபோல சிவப்பு நிறத்தில் கூட்டல் சின்னம் பொறித்திருப்பார்கள். உண்மையில் இது டாக்டர்கள் அல்லது மருத்துவரின் சின்னம் அல்ல. அந்த சின்னம் செஞ்சிலுவை (Red Cross) சங்கத்தினரின் சின்னம் ஆகும். உலக போர்கள், மற்ற நாட்டுப்போர்கள் நடக்கும்போது, அதாவது யுத்தத்தினபோது ⊕ இந்த குறியிட்ட உடைகளை தரித்துகொண்டு அல்லது இந்த சின்னத்தை சிகப்பு வர்ணத்தில் வரைந்து வாகனங்களை (ஜீப்) ஒட்டி சென்றால் அதை நோக்கி எந்த நாட்டு ராணுவ வீரர்களும் சுடக்கூடாது. சேதப்படுத்தகூடாது. காரணம் இந்த குறியிட்ட செஞ்ஜிலுவை சங்கத்தினர் அனைத்து நாட்டு படையினருக்கும், காயம் அடைந்தவர்களுக்கு முதல் உதவி செய்ய போகிறவர்கள். ஆகவே அவர்களுக்கு யாரும் தீங்கிழைக்க கூடாது என்று உலக நாடுகள் செய்துகொண்ட ஒப்பந்தம் ஆகும்.

ஆனால் **டாக்டர்கள்** என்பதற்கும் **ஆஸ்பத்திரி** என்பதற்கும் உலக நாடுகளால் தெரிந்தெடுக்கப்பட்ட சின்னம் **இருபாம்புகள்** ஒரு ஜோடி **இறக்கைகள்** கொண்ட அடையாள சின்னமாகும். இதைக்குறித்து FMPB மாதாந்திர பத்திரிகையில் வெளியிட்ட தகவலின் தொகுப்பை முன்னுரையாக அவர்கள் எழுதியபடியே வாசகர்ளுக்காக சமர்ப்பிக்கிறேன்.



## மருத்துவ சின்னம்

மருத்துவ சின்னத்தில் **இருபாம்பின் உருவங்களும்** ஒரு ஜோடி இறக்கைகளும் காணப்படுவதைக் காணலாம். இந்த **மருத்துச் சின்னம்** வேதத்தின் அடிப்படையானதாக அநேகரால் கருதப்படுகிறது. அதே சமயம் இம்மருத்துவசின்னம் **கிரேக்க புராணங்களில்** மருத்துவத்தின் தந்தையாக கருதப்படும் **ஹிப்போ கிரட்டிஸீடனும் தொடர்புடையது** என்றும் பலர் கருதுகின்றனர். ஆயினும் **கிரேக்க** கலாச்சாரத்தில் வேதாகமத்தின் செல்வாக்கு **ஹிப்போகிரட்டிஸ்–**ன் காலங்களுக்கு முன்னரே காணப்பட்டுள்ளதால் இந்த **மருத்துவ சின்னம்** வேதாகம சம்பவங்களின் நிழலிலே உருவாக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் வலுவடைகிறது. குறிப்பாக இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தை நோக்கிச் சென்ற பயணத்திலே இஸ்ரவேல் மக்கள் முரட்டாடம் பிடித்தவர்களாய் கர்த்தர் மனதை வேதனைப்படுத்தியதால் கர்த்தர் கோபம் கொண்டு **பாம்புகளை** இஸ்ரவேல் பாளையத்துக்குள் அனுப்பி மக்களை கடிக்கச்செய்து தண்டனை கொடுத்தார்.

பாளையம் எங்கும் பாம்புகடியால் மரித்தவர்களின் குடும்பங்களில் அழுகையின் ஓலம் எழுந்தது. தாங்கள் கர்த்தருக்கு விரோதமாய் தவறு செய்துவிட்டோம் என்று ஊழியரிடம் அறிக்கையிட்டார்கள். அப்போது தேவன் மோசேயோடு கூறியதென்னவெனில்

**நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் வெண்கலத்தில் செய்து , அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை, கடிப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றார். அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான். சர்ப்பம் ஒருவனை கடித்தபோது அவன் அந்த வெண்கலச் சர்பத்தை நோக்கிப் பார்த்ததும் பிழைத்துக்கொண்டான்.** (எண்ணாகமம் 21:8 & 9)

**வெண்கல சர்ப்பத்தை** ஒரு கம்பத்தின்மேல் தூக்கி நிறுத்திய சம்பவத்தை இயேசு கிறஸ்து உதாரணத்துக்காக அதை சுட்டிக்காட்டினார்.

**பாம்பு விக்கிரகம்** பாம்பு விஷத்தை நீக்கி கடிபட்டவர்களை சுகம் ஆக்குவதைபோல் சிலர் யோசிக்கலாம். சுகம் ஆனது அந்த மக்கள் **மனம் திரும்பியதாலும்** வெண்கல சர்ப்பத்தை பார்த்தால் எப்படி சுகம் கிடைக்கும் என்பதை போன்ற கேள்விகேட்காமல் அறிவிக்கப்பட்டபடி **கீழ்படிந்ததால் தான்** விஷம் இறங்கி சுகம் பெற்றார்கள். வெண்கல சர்ப்பத்துக்கு சக்தி இல்லை. கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிந்ததாலதான் சுகம் பெறறார்கள்.

கேள்வி கேட்காமல் **கீழ்படிகிறார்களா** என்பதை கர்த்தர் கவணித்ததால் சுகம் கிடைத்தது. **ஆதாம் – ஏவாள்** கொலை செய்யவில்லை, விபச்சாரம் செய்யவில்லை, பிறகு ஏன் கர்த்தர் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே துரத்தினார். காரணம் **புசிக்காதே** என்று கர்த்தர் கட்டளையிட்ட அந்த **விலக்கப்பட்ட கணியை** புசித்ததால்தான் அவர்களை ஏதேன் தோட்டத்தைவிட்டு துறத்தப்பட்டார்கள். அதனால்தான் வேதம் கூறுகிறது **பலியை பார்க்கிலும் கீழ்படிதலே உத்தமம்** என்று எழுதியுள்ளது. கீழ்படிதலை உணர்த்துவதற்காகவே இயேசு இந்த உதாரணத்தை தான் அறையப்பட்ட சிலுவையோடு ஒப்பிட்டு பேசினார்.

உதா. இதோ **திருடனைப்போல வருகிறேன்** என்று வெளி 16:15 தம் வருகையை பற்றிக்கூற ஆவயானவர் ஏன் **திருடனை** உதாரணமாக்கினார்? காரணம் திருடன் சொல்லாமல் **எந்த வேளையிலும் திடீரென்று** வரலாம். ஆகவேதான் மக்கள் விளங்கிக்கொள்ள எளிமையான உதாரணமாக திருடனை ஒப்பிட்டு ஆவியானவர் பேசினார்.

இது தொடர்பாக கிறிஸஸ்து கூறுவதென்னவெனில்

**சர்ப்பமானது** மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல **மனுஷ குமாரனும்** தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு **உயர்த்தப்படவேண்டும்.** தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:14-19)

ஆம் தேவ வார்த்தையின்படி கம்பத்தில் இருக்கும் **பாம்பை** நோக்கிப் பார்த்து அன்று **இஸ்ரவேலர்கள் குணப்பட்டு** பிழைத்ததுபோல **சிலுவையில்** இயேசுவின் **மரணத்தையும் உயிர்த்தெழுதலையும்** விசுவாசித்து சிலுவையை நோக்கிப்பார்த்து இன்று தேவ பிள்ளைகளாகிய நாம் அனைவரும் நமது பாவ மற்றும் **சரீர நோய்களிலிருந்து** சுகம்பெற முடியும். ஆனால் **கோலிலிருந்த பாம்பு அல்ல**. தேவ **வார்த்தை** மற்றும் கிறிஸ்துவின் மீதுள்ள **விசுவாசமும் கீழ்படிதலுமே** நம்மை **பூரணமாய்** குணப்படுத்த முடியும்.

எப்படியும் மருத்துவச் சின்னத்தின் ஆதாரம் குறித்து எண்ணாகமம் 21ம் அதிகாரத்தில் **தேவன் மோசேயிடம்** கூறிய கூற்றுகளின் அடிப்படையிலும், பின்னர் **யோவான்** மூனறாம் அதிகாரத்தில் கிறிஸ்து இது தொடர்பாக கூறியிருப்பதின் அடிப்படையிலும் பார்க்கும்போது **பாம்புகள்** சுற்றியுள்ள படம் **மருத்துவ சின்னமாக** வேதத்தின் வெளிச்சத்திலே உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பதை **நமக்கு ஊர்ஜிதப்படுத்துகிறது.**

# சர்ப்பமானது வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டது போல (யோவான் 3:14)

நன்றி : Dr. வசந்தகுமார்

இயேசு கிறிஸ்து நிக்கோதேமுவோடு உரையாடிக் கொண்டிருக்கும்போது யூத **மதப் போதகான** அவனுக்கு இயேசு கிறிஸ்து சில பரம காரியங்களை அறிவித்தார். அவற்றில் முக்கியமான ஒரு விடயம் அநேகரால் புரிந்துகொள்ள முடியாத கடினமான வார்த்தைகளைக்கொண்டுள்ளது. இது என்னவெனறால் **பழைய ஏற்பாட்டுக் காலத்தில்** நடைபெற்ற சம்பவமொன்றை தன்னுடைய **சிலுவை மரணத்தோடு தொடர்புபடுத்திய** இயேசு **சர்ப்பாமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல, மனுஷ குமாரனும் தன்னை விசவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நத்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்படவேண்டும்** என்று தெரிவித்தார். இயேசு குறிப்படும் சம்பவம் பழைய ஏற்பாட்டில் எண்ணாகமம் 21ம் அதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளதை முன்பே நாம் வாசித்தோம். பெரும்பலான கிறிஸ்தவர்கள் இவ்வசனத்தில் இயேசு **தன்னைதான் சர்ப்பத்துக்கு ஒப்பிட்டுள்ளதாகக்** கருதுகின்றனர். எனினும் வேதத்தில் **சாத்தானே** சர்ப்பத்துக்கு **ஒப்பிடப்பட்டுள்ளமையால்** (ஆதி 3, வெளி 12:9) இயேசு கிறிஸ்து எவ்வாறு **தன்னைச் சர்ப்பத்துக்கு ஒப்பிட்டுப்** பேச முடியும் என்பது இன்று அநேகரது கேள்வியாயுள்ளது.

**சர்ப்பத்தின்** சாயலான **உருவமே** மோசேயினால் உயர்த்தப்பட்டதுபோல சிலுவையில் தன்னைப் பலியாக கொடுத்த இயேசு **பாவ மனுஷரின் சாயலாய்** இருந்தாரேதவிர, அவர் **பாவியாக இருக்கவில்லை** என விளக்குகின்றனர். எனினும் இந்த அளவுக்கு சர்ப்பத்தை இயேசுவுக்கு ஒப்பிட்டு பேசுவது **மிகைப்படுத்தப்பட்ட** ஒரு வியாக்கியானமாகவே உள்ளது. ஏனென்றால் இயேசுவின் வார்த்தைகளில் **ஒப்பிடுதலானது** உயர்த்தப்படும் செயலில் மட்டுமே உள்ளது. அவர் தன்னை **வெண்கலச் சர்ப்பத்தோடு** இனங்காணவில்லை. அதாவது இயேசு **சர்ப்பத்தைப் போல** எனக் கூறவில்லை, மாறாக **உயர்த்தப்பட்டதைபோல** என்றே குறிப்பிட்டுள்ளார். மூலமொழியில் ஒப்பிட்டு காட்டும் செயல் போல எனும் பதமானது **உயர்த்தப்படும்** செயலுக்கே உபயோகிக்கப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் **உயர்த்தப்பட்டதுபோல** மனுஷ குமாரனும் **உயர்த்தபடுவார்** என்றே இயேசு குறிப்பிட்டுள்ளார்.

உயர்த்தப்படுதல் என்பதற்கு இயேசு உபயோகித்துள்ள ஹிப்ஸ்ஸோ (hypsoo) எனும் கிரேக்க பதமானது யோவானின் சுவிசேஷத்தில் இயேசு சிலுவையில் உயர்த்தப்படுவதைக் குறிக்கவே உபயோகப்படுள்ளது (யோவா 8:28, 12:32,34) அப்போஸ்தலர் நடபடிகளில் இயேசு கிறிஸ்து **பரலோகத்துக்கு உயர்த்தப்படுவதற்கும்** மூலமொழியில் இதே வார்த்தையே உபயோகிக்கப்பட்டுள்ளமையால் (அப் 2:33, 5:31,) யோவான் சுவிசேஷத்தில் **ஹிப்ஸ்ஸோ** எனும் பதம் உபயோகிக்கப்பட்டுள்ள இடங்களில் அது இயேசுவின் சிலுவை மரணத்தையே குறிப்பதை நாம் அவதாணிக்லாம். குறிப்பாக யோவான் 12:32ல் குறிப்பிடப்பட்டுள்ள **நான் பூமிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துகொள்ளுவேன்** எனும் இயேசுவின் கூற்றானது அதற்கடுத்த வசனத்தில் தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படி சொன்னார் என யோவானால் விளக்கப்பட்டிருப்பதிலிருந்து மனுஷ குமாரன் **உயர்த்தப்படுதல்** எனும் சொற் பிரயோகம் இயேசுவின் சிலுவை மரணத்தையே குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது, எனினும் இயேசுவைப் பொறுத்தவரை அவர் சிலுவையில் உயர்த்தப்பட்டதானது அவர் பரத்துக்கு உயர்த்தப்படுவதற்கான ஆரம்பச் செயலாகவும் இருக்கின்றது.

மனுஷ குமாரன் **உயர்த்தப்படவேண்டும்** எனும் இயேசுவின் கூற்றில் வேண்டும் எனும் பதமானது மூலமொழியில் **கட்டாயம்** நடைபெற வேண்டிய செயலைச் சுட்டிக்காட்டுகிறது. அதாவது இயேசு கிறிஸ்து கட்டாயம் மரிக்கவேண்டும் . ஏனென்றால் **அவரது மரணத்தினால்** மட்டுமே மக்களுக்கு **பாவ மன்னிப்பும் நித்திய ஜீவனும்** கிடைப்பதற்கான மார்க்கத்தை உருவாக்கக் கூடியதாயிருந்தது. உண்மையில் மானிட பாவத்துக்காக இருக்கும் ஒரேயொரு பரிகாரம் **இயேசுவின் சிலுவை மரணமே.** தேவனால் மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ள இப்பாவ மன்னிப்பின் முறையை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களுக்கு நித்திய ஜீவன் இருப்பதையும் இயேசு அறியத் தந்துள்ளார்.

**வேத ஆராய்ச்சி – 1**

# தேவ தூதர் மனுஷ குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும்... இறங்குகிறதையும்... (யோவான் 1:51)

யோவான் எழுதிய சுவிசேஷத்தில், **முதல் மூன்று சுவிசேஷப் புத்தகங்களிலும்** இடம்பெறாத இயேசுவின் பல அருளுரைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றிலும் நம்மால் புரிந்துக்கொள்வதற்கு **சிரமமாயிருக்கும்** பல வசனங்கள் உள்ளன. இயேசுவின் இத்தகைய கடினமான கூற்றுக்களில் முதலாவதாய்க் குறிப்பிடப்பட்டிருப்பது அவர் **நத்தான்வேலுக்குக்** கூறிய விடயமாகும். இயேசு கிறிஸ்து யார் என்பதை நத்தான்வேல் அறிந்து கொண்டபோது, அவர் அவனை நோக்கி: வானம் **திறந்திருக்கிறதையும், தேவ தூதர்கள்** மனுஷ குமாரனிடத்திலிருந்து **ஏறுகிறதையும், இறங்குகிறதையும்** நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (யோவா. 1:51)

இயேசுவினுடைய இக்கூற்றின் அர்த்தத்தை அறிந்துகொள்வதற்கு சிரமமாயிருப்பதற்கான காரணம். அவர் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ள விதமான ஒரு சம்பவத்தை, அதாவது **வானம் திறந்திருக்கிறதையும்,** தேவ தூதர்கள் மனுஷ குமாரனிடத்திலிருந்து **ஏறுகிறதையும் இறங்குகிறதையும்** அவருடைய சீடர்கள் கண்டது பற்றி சுவிசேஷ புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதேயாகும். **புதிய ஏற்பாட்டில்** நான்கு இடங்களில் மட்டுமே **வானம் திறந்ததைப்பற்றி** நாம் வாசிக்கலாம். ஆரம்பத்தில் இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது வானம் திறந்திட பரிசுத்த ஆவியானவர், புறாவின் ரூபங்கொண்டு அவர்மீது இறங்கியதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. (லூக். 3:21-22) அதன்பின்னர் **ஸ்தேவான் இரத்த சாட்சியாக** மரிக்கும்போது **வானம் திறந்திருப்பதையும்,** இயேசு கிறிஸ்து மகிமை பொருந்தியவராய் **நிற்பதையும்** அவன் கண்டான் (அப். 7:55-56) அதேபோல் பேதுருவுக்கும் போவானுக்கும் கிடைத்த தரிசனங்களிலும் அவர்கள் **வானம் திறந்திருக்கிறதைக்** கண்டார்கள் (அப். 10:10,12, வெளி 4:1, 19:11) எனினும் இச்சந்தர்ப்பங்களில் இயேசு நாத்தான்வேலுக்கு அறிவித்தவிதமாக வேரு எவரும் தேவதூதர்கள் மனுஷ குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் **இறங்குகிறதையும்** காணவில்லை. இதனால் இயேசு கிறிஸ்து நாத்தான்வேலுக்கு **எதைப்பற்றி முன்னறிவித்துள்ளார்** என்பதை பலர் அறியமுடியாதவர்களாக இருக்கிறனர்.

உண்மையில், இயேசு கிறிஸ்து குறிப்பிடும் விதமான ஒரு விவரணம் பழைய ஏற்பாட்டில் **யாக்கோபின் தரிசனத்திலேயே** உள்ளது. இதனால் கிறிஸ்தவ இறையியலாளர்களும், வேத ஆராய்ச்சியாளர்களும் **யாக்கோபின் தரிசனத்தை** அடிப்படையாகக்கொண்டே இயேசுவின் வார்த்தைகளை விளக்கவேண்டும் என்பதைக் சுட்டிக் காட்டுகின்றனர். ஏனெனில் இயேசு குறிப்பிட்டவிதமாக **வானத்துக்கும் பூமிக்கும்** இடையில் இருந்த ஏணியில் தேவ தூதர்கள் **ஏறுகிறதையும் இறங்குகிறதையும்** யாக்கோபு கண்டான். (ஆதி. 28:12) எனினும் யாக்கோபின் தரிசனத்தில் வானம் திறக்கப்பட்டதைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இரண்டிலும் உள்ள பொதுவான விடயம் **வானத்துக்கும் பூமிக்கும்** இடையிலான தொடர்பாகும். யாக்கோபின் தரிசனத்திலுள்ள **ஏணிக்குப் பதிலாக** இயேசுவின் கூற்றில் **மனுஷ குமாரன் வானத்துக்கும் பூமிக்கும்** இடையிலான **ஏணியாய் இருக்கிறார்.**

இயேசுவின் கூற்றானது நாத்தான்வேலுடனான அவரது உரையாடலிலேயே இடம்பெறுவதனால் அவர் அவனைக் கண்டபோது, அவன் **யாக்கோபின் தரிசனத்தைப்பற்றிய வேதப் பகுதியையே** தியானித்துக் கொண்டிருந்ததாகச் சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நாத்தான்வேல் தன்னிடத்தில் வருவதற்கும் முன்னேதான் அவன் **அத்தி மரத்தின்கீழ்** கண்டதாக இயேசு குறிப்பிட்டுள்ளார். (யோ 1:48) அத்திமரம் நிழல் தரக்கூடியவையாய் இருந்தமையால் **ஜெபிப்பதற்கும்** வேதத்தைக் **தியானிப்பதற்கும்** அக்கால யூதர்கள் அம்மரத்தின் கீழ் இருப்பது வழக்கம். இவ்வாறு **நத்தான்வேல்** பழைய ஏற்பாட்டில் சித்தரிக்கப்பட்டிருக்கும் **யாக்கோபின் தரிசனத்தைத்** தியானித்துக் கொண்டிருந்தமையினாலேயே அவ்விதமான ஒரு விவரணத்தின் மூலம் இயேசு அவனோடு பேசியுள்ளதாகக் கருதப்படுகிறது.

**வானம் திறக்கப்படும்** தரிசனமானது தெய்வீக விடயங்களை மாந்தர்க்கு காட்டும் பரலோகக் காட்சியாய் உள்ளது. எனவே **பரலோக விடயங்கள்** மனிதருக்கு வெளிப்படுத்தப்படுவதைப்பற்றியே இயேசு இங்கு குறிப்பிட்டுள்ளார். மேலும் **மனுஷ குமாரனிடத்திலிருந்து** எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை மூல மொழியின்படி **மனுஷ குமாரனின் மீது** என்றிருக்க வேண்டும். அதாவது தேவ தூதர்கள் **மனுஷ குமாரனின் மீதே** பூமியிலிருந்து **வானத்துக்கு ஏறுகிறவர்களாகவும்,** வானத்தில் இருந்து **பூமிக்கு இறங்கிறவர்களாகவும்** குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில், மனுஷகுமாரனாகிய இயேசுவே வானத்திற்கும் பூமிக்கும் **இடையிலான** ஏணியாய் இருக்கிறார். எனவே **பரலோக விடயங்கள்** மக்களுக்கு அறியத்தருபவராக தான் இருப்பதை இயேசு இங்கு சுட்டிக்காட்டுகிறார். இயேசு **மக்களுக்கு வானத்தைக்** திறந்து **காண்பிப்பவராக** இருக்கிறார்.

மனுஷ குமாரனாகிய தன்மீது தேவதூதர்கள் ஏறுவதையும் இறங்குவதையும் பற்றி இயேசு குறிப்பிட்டுள்ளதானது. **பூலோகத்திலிருந்து** பரலோகத்துக்குச் செல்லும் வழி **இயேசுவிலேயே இருக்கின்றது** என்பதையும், வானத்திலிருந்து தூதர்கள் இறங்கி வருவதானது. **பரலோக செய்திகள்** இயேசுவின் மூலமாகவே **பூமிக்கு வர முடியும்** என்பதையும் அறியத் தருகிறது. வானத்துக்கும் பூமிக்கும் இடையில் இருக்கும் ஒரேயொரு இணைப்பாக இயேசுவே இருக்கிறார். அவர் **பரலோக விடயங்களைப்** பூமிக்கு கொண்டு வருவதோடு **பூமியிலிருக்கும் மாந்தரைப் பரலோகத்துக்குக்கொண்டு போகிறவராகவும்** இருக்கிறார்.

## வேத ஆராய்ச்சி – 2
## ஸ்திரீயே உனக்கும் எனக்கும் என்ன ? (யோவான் 2:4)

இயேசு கிறிஸ்துவின் கூற்றுக்களிலேயே **கிரகித்துக்கொள்வதற்குச்** சிரமாயிருக்கும் வார்த்தைகள் அவர் தன் **தாயாகிய மரியாளை** அழைத்த முறையாகும். அவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தன் தாயை அம்மா என அழைத்ததாக சுவிசேஷப் புத்தககங்களில் குறிப்பிடப்படாமையினால் அவர் தன் தாயை மதிக்காதவராகவும் அவளோடு கடுமையாக நடந்துகொண்டுள்ளதாகவும் பலர் எண்ணுகின்றனர். யோவான் எழுதிய சுவிசேஷத்தில் **கானா** எனும் ஊரில் நடைபெற்ற **திருமண விருந்தின்போதும்,** சிலுவையில் **மரிக்கும்போதும்** அவர் **தன் தாயை ஸ்திரீயே** என்றே அழைத்துள்ளார். (யோவா. 2:4, 19:26) மேலும் அவர் இதே விதமாகவே ஏனைய பெண்களையும் அழைத்துள்ளதை சுவிசேஷப் புத்தகங்களில் நாம் அறியலாம். (மத். 15:28, லூக் 13:12, யோவா. 14:21, 20:15) இயேசுவின் சிலுவை மரணத்தின் பின்னர் **மரியாளைப் பராமரித்து வந்த யோவான்** தனது சுவிசேஷப் புத்தகத்தில் அவளது பெயரைக்கூட குறிப்பிடாமல் மரியாதையாக **இயேசுவின் தாய்** எனக் குறிப்பிட்டிருக்கையில் (யோவா. 2:1) இயேசு தன் தாயை **ஸ்திரியே** என அழைத்தது உண்மையிலேயே நமக்கு குழப்பத்தையே ஏற்படுத்துகிறது.

**ஸ்திரீ** எனும் வார்த்தை **ஒரு பெண்ணை** அழைப்பதற்குத் தமிழில் சற்று தரக்குறைவானதாகத் தென்பட்டாலும் மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள குனெய் *(Gunai)* எனும் கிரேக்க பதமானது மரியாதை **குறைவான வார்த்தை அல்ல**. மேலும் இயேசு சிலுவையில் மரிக்கும்போது இவ்விதமாகவே தன் தாயை அழைத்துள்ளபோதிலும் அச்சந்தர்ப்பத்தில் அவளோடு அவர் கடுமையாகப் பேசவில்லை. கிரேக்க நாட்டில் இது **மாரியாதையுடனும் பாசத்துடனும்** ஒரு பெண்ணை அழைக்க உபயோகிக்கப்படும் வார்த்தையாகும். அக்காலத்தில் பாசமுள்ள கணவன் தன் மனைவியை அழைப்பதற்கு இவ்வார்த்தையையே உபயோகிப்பது வழமை. கிரேக்க இலக்கியங்களிலும் இதனை நாம் அறியலாம். உண்மையில் இது மரியாதையுடனும் அன்புடனும் ஒரு பெண்ணை அழைக்க உபயோகிக்கப்பட்ட வார்த்தையாகும், எனினும் **ஒரு மகன்** தன் தாயை அழைப்பதற்கு இது **பொருத்தமான வார்த்தை எனக் கூறுவதற்கில்லை.** யூதர்களோ இல்லையென்றால் **கிரேக்கர்களோ** தாயை அழைக்க இவ்வார்த்தையை என்றுமே உபயோகித்ததில்லை.

இயேசு கிறிஸ்து தன் தாயை மரியாதைக் குறைவாக அழைக்காதபோதிலும் **தனக்கும் அவளுக்கும்** இடையிலான **உறவில் ஒரு மாற்றத்தை** அதாவது ஒரு தொலைவை **இதன் மூலம் காண்பித்துள்ளார்.** அதாவது அதுவரை **மரியாள் மகனாகச்** செயற்பட்ட அவர், இப்போது **தேவ குமாரனாகச்** செயற்பட வேண்டிய **காலம் வந்துவிட்டதை** மரியாளுக்கு **உணர்த்துவதற்காகத்** தனது பகிரங்க ஊழியக் காலத்தில் அவர் மற்ற **பெண்களை அழைத்தவிதமாகவே** அவளையும் அழைத்துள்ளார், இதை அவரது வார்த்தைகளே அறியத் தருகின்றன. ஏனென்றால் **எனக்கும் உனக்கும் என்ன?** எனும் அடுத்துவரும் இயேசுவின் வார்த்தைகள் இரு **நபர்களுக்கிடையிலான உறவில்** ஒரு பெரும் இடைவெளி அல்லது தொலைவு இருப்பதைச் சுட்டிக்காட்ட உபயோகிக்கப்படும் **எபிரேயச் சொற் பிரயோகமாகும்.**. எனினும் இது உச்சரிப்பின் முறையை அடிப்படையாய் கொண்டு கடுமையாக அல்லது மென்மையாகச் சொல்லப்படலாம், **பிசாசுகள்** இயேசு கிறிஸ்துவோடு பேசும்போது இச்சொற் பிரயோகத்தைக் **கடுமையாகவே உபயோகித்துள்ளன.** (மத். 8:29, மாற் 1:24, 5:7, லூக் 4:34, 8:28) இயேசு மரியாளோடு கடுமையாக பேசியிருந்தால் அவரது அந்த வார்த்தைகள் தன் அலுவல்களில் மரியாளை தலையிடாமல் இருக்கும்படியும், தனது விருப்பம்போல செயற்படத் தன்னை விட்டுவிடும்படியும் கூறுவதாகப் பொருள்படும். ஆனால் மென்மையாக உபயோகிக்கும்போது இச்சொற்பிரயோகம் **கடிந்து கொள்ளுதலை** அல்லது மாறாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதையே சுட்டிக்காட்டும். இயேசு மரியாளைக் **கடிந்துகொள்ளாமல் மரியாதையுடனும் பாசத்துடனுமே** பேசியுள்ளமையால் அவர் தனக்கும் மரியாளுக்கும இடையிலான உறவுவை மரியாள் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதைச் **சுட்டிக்காட்டுவதற்காக** இவ்வாறு கூறியுள்ளார். அதுவரை காலமும் மரியாளின் அதிகாரத்துக்குக் கீழ்படிந்து வாழ்ந்த இயேசு (லூக் 2:51) **அவளது அதிகாரத்துக்குத் தான் உட்பட்டிருந்த காலம் முடிவடைந்துவிட்டதை** சுட்டிக்காட்டுவதற்காக அவளை இவ்வாறு அழைத்துள்ளார். எனவே மரியாள் இனிமேல் தன்னை **அவளுடைய மகனாக மட்டும்** பார்க்காமல் தன்னுடைய கர்த்தராகவும் பார்கும்படியாக அவளை இவ்வாறு அழைத்துள்ளார்.

தன் தாயை **ஸ்திரீயே** என அழைத்து தனக்கும் அவளுக்கும் இடையிலான உறவின் தன்மையை அவள் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதை அவளுக்குச் சுட்டிக்காட்டிய இயேசு, **என் வேளை இன்னும் வரவில்லை.** (யோவா 2:4) என்றும் கூறினார். யோவானுடைய சுவிசேஷத்தில் இயேசுவின் இக்கூற்று ஐந்து தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு (2:4, 7:6, 7:8, 7:30, 8:20) மூன்று தடவைகள் **என் வேளை வந்துவிட்டது** என்றும் அவர் தெரிவித்துள்ளார் (12:23, 13:1, 17:1) இயேசு கிறிஸ்து தான் மரிக்கும் நேரம் நெருங்கிவரும் போதே **என்**

**வேளை வந்துவிட்டது** எனக் குறிப்பிட்டுள்ளமையால் அவரது **வேளை** என்று குறிப்பிட்டுள்ளது. **சிலுவை மரணம்** என்பது தெளிவாகின்றது. சிலுவையில் தன்னைப் பலியாகக் கொடுப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்தமையால் அப் பணியைச் செய்வதற்காகவே தான் வந்துள்ளதை **ஆரம்பத்திலேயே தன் தாய்க்கு** உணர்த்துவதற்காக தனக்கும் அவளுக்கும் இடையிலான உறவின் தன்மையை சுட்டிக்காட்ட அவர் தன் தாயோடு இவ்வாறு பேசினார். இயேசு மேசியாவாகச் செயற்பட ஆரம்பித்த போது அவருக்கும் மரியாளுக்குமிடையிலான உறவில் ஒரு மாறுதல் ஏற்பட்டதை எவராலும் மறுக்கமுடியாது. எனவே இங்கு எவ்வித மரியாதைக் குறைவும் அவமதிப்பும் இல்லை. எனவே சில வேத ஆராய்ச்சியாளர்கள் சிலர் புதிய வேதாகம மொழிபெயர்ப்பில் இயேசுவின் வார்ததையைத் **தாயே** என மாற்றியுள்ளது போல மாற்றுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. ஆகவே மரியாளை நமக்காக இயேசுவிடம் பரிந்துபேசும் நபராக ஒருகாலும் வேதம் போதிக்கவில்லை.

இயேசு கிறிஸ்துவிம் **மரியாளை** தன் அலோசகராகவோ மரியாளின் சிபாரிசை ஏற்றுக்கொண்டு அற்புதம் செய்வேன் எனறோ ஒரு இடத்திலும்கூறவில்லை. இன்று **கத்தேலிக்க சபை** மரியளை தெய்வத்துக்கு சமமாக ஆக்கி, பலவித இடங்களில் பலருக்கு தரிசனம் கொடுத்து பல அற்புதங்களை செய்வதாக கற்பனை கதைகளை மக்களிடம் பரப்பி இயேசு கிறிஸ்துவை பின் தள்ளுகிறார்கள். மாதா TV சேனலில் கலந்துரையாடல் பகுதியில் சிலர் கேட்ட கேள்விக்கு கத்தோலிக்க ஆயர்கள் பதில்கூற தினரிவிட்டதை கணகூடாக காணநேர்ந்தது. நாங்கள் மரியாளை தெய்வமாக வணங்கவில்லை. ஆனால் மரியாதை செலுத்துகிறோம் என்று கூறி சமாளித்தார்கள்.

**மரியாள் செத்துப்போனவர் – அந்தோணியார் செத்துப்போனவர் – யோவான் செத்துப்போனவர்**

வேதம் போதிப்பது என்ன ? செத்துப்போனவர்கள் யாராக இருந்தாலும் எத்தனை பரிசுத்தவான்களாவும், பரிசுததவாட்டியாகவும் இருந்தாலும் அவர்கள் செத்துபபோனவர்களானதால், செத்துப்போன ஆவிகள் பூமிக்கு வர இயலாது. செத்துப்போனவர்கள் ஒருகாலும் அற்புதம் எதுவும் செய்ய இயலாது. பிர. 9:5,சங் 88:10, யோபு 14ம அதிகாரம். இந்த வசனங்கள் எல்லாம் செத்துப்போனவர்கள் எந்த அற்புதமும் செய்ய இயலாது. ஆகவேதான் **மரியாளை** எங்ளுக்காக வேண்டிக்கொள்ளும் என்று ஜெபிக்க கூடாது, ஜெப மாலை உருட்டி ஜெபித்தாலும் அந்த ஜெபம் கேட்கப்படாது. காரணம், கர்த்தர்செய்த ஏற்பாடு என்னவென்றால் இயேசு கிறிஸ்துவேயன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சக்கப்படும்படிக்கு வானத்தில் கீழ் எங்கும் மனுஷருக்குள்ளே இயேசு என்னும் நாமமேயெல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப் 4:12

அதனால்தான் செத்துப்போன மரியாளோடு ஜெபம் செய்யக்கூடாது , நமக்காக பிதாவிடம் பரிந்துரைக்க கர்த்தர் ஏற்பாடு செய்யப்பட்டவர் இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டும்தான்.

1 தீமோ. 2:5,6 தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே (அவர்) எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த (உலகத்தில்) மனுஷனாக பிறந்து இரத்தம் சிந்தி மரித்து உயித்தெழுந்து இப்போதும் உயிரோடிருக்கிற கிறிஸ்து இயேசு அவரே.

ஆகவேதான் கர்த்தர் முன் எச்சரிக்கையாக உபாகமம் 18:11 செத்தவர்களிடத்தில் பேசுகிறவர்கள் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம் என்று கர்த்தர் கூறினார். காரணம் **செத்துப்போனவர்கள் பெயரில் கிரியைசெய்கிறவன் பிசாசு.** செத்துப்போன ஆவி **பிசாசு** என்று மக்கள் அறியாமல் அந்த சொத்துப்போன ஆவிகளிடத்தில் பேசவும், வேண்டுதல் செய்யவும் போகிறார்களே, அவர்ளை உணர்த்தவே கர்த்தர் பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே எச்சரித்தார்.

இப்படி வசனங்கள் தெளிவாக போதிப்பதால்தான் செத்துப்போன வேளாங்கன்னியிடம் போய் ஜெபிக்கக்கூடாது என்று எச்சரிக்கிறார்.

மேலே வாசித்த கட்டுரைப்படி குறிப்பிட்ட நாள் வரை இயேசுவை பெற்ற தாயாக மரியாளுக்கு மரியாதை கொடுத்த இயேசு, குறிப்பிட்ட காலம் வந்தவுடன் தன்னை பெற்ற மரியாளுக்கும் இயேசு கர்த்தராக, வழிநடத்துபவராக இருப்பதை உணர்த்தவே **ஸ்திரீயே** என்று ஒரு சாதாரண பெண்ணை அழைப்பதைப்போல அழைக்கிறார். உனக்கும் எனக்கும் என்ன? என்று பிரித்து பேசுகிறார்.

பெற்றோர் உன்னை தேடுகிறார்கள் என்று கூறியபோது இயேசு கூறினார். யார் எனக்கு தாய்? யார் எனக்கு தகப்பன். என் வசனத்துக்கு கீழ்படிபவர்களே என் தாயும், தகப்பனும், சகோதரனமாய் இருக்கிறார்கள்.

இனியாவது மரியாளிடம் வேண்டிக்கொள்கிறவர்கள் வாசித்த கட்டுரையின்படி இயேசு கிறிஸ்துவோடு மட்டும் தொடர்ப்பு கொண்டு ஜெபியுங்கள்

**மரியாள் செத்துப்போனவர்,** அவரால் உங்கள் பாவங்களை மன்னிக்க முடியாது. உங்களை இரட்சிக்க முடியாது. தண்ணீர் திராட்ச ரசமாக மாற வேண்டுமானல் மரியாளினால் இயலாது. இயேசுவால் மட்டுமே உன் குறையை நிறைவாக்க முடியும். இயேசு கிறிஸ்து மரித்தார், ஆனாலும் சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறார்.

ஜாமக்காரன் வாசகர்கள் CSI லூத்தரன், பெந்தேகோஸ்தே இப்படி பல சபைகளிலுள்ள பெயர் கிறிஸ்தவர்கள் இரகசிமாக **வேளாங்கன்னி** போய் வருகிறார்கள்.

இயேசு ஜீவிக்கிறார் – நாமும் ஜீவிக்கிறோம்.

## வேத ஆராய்ச்சி – 3

# ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் (யோவான் 3:5)

இயேசு கிறிஸ்துவின் கூற்றுக்களில், இன்று அதிக சர்ச்சைக்குரியதாய் இருக்கும் வாக்கியம் யோவான் 3ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, தன்னிடத்தில் வந்த **யூத மதப்போதகனான** நிக்கொதேமுவுடன் உரையாடிக்கொண்டருக்கும்போது, அவன் **மறுபடியும் பிறக்கவேண்டும்** என்பதை இயேசு அவனுக்குச் சுட்டிக் காட்டினார். ஆனால் நிக்கொதேமுவோ இயேசுவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்ளவில்லை (யோ. 3:1–4) இதனால் **மறுபடியும் பிறத்தல்** என்றால் என்ன என்பதை அவனுக்கு விளக்குவதற்காக **ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும்** பிறாவாவிட்டால் **தேவனுடைய ராஜ்ஜித்தில் பிரவேசிக்கமாட்டான்** என இயேசு தெரிவித்தார் (யோவா. 3:5) **ஜலத்தினாலும் ஆவியினாலும்** பிறப்பதே **மறுபடியும் பிறத்தல்** என்பதை இயேசு தெளிவாக குறிப்பிட்டுள்ளபோதிலும், அவர் **ஜலம் – ஆவி** எனும் இரு பதங்களையும் என்ன அர்த்தத்தோடு உபயோகித்துளளார் என்பது பற்றி கிறிஸ்தவர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

சகல சபைப் பிரிவுகளையும் சேர்ந்த கிறிஸ்தவர்கள். இயேசுவின் கூற்றில் ஆவி என்பது **பரிசுத்த ஆவியானவரையே** குறிக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் **ஜலம்** எதை குறிக்கின்றது என்பதில்தான் **கருத்து முரண்பாடுகள்** உள்ளன. மேலும் ஜலத்தினால் பிறத்தல் எனும் இச்சொற் பிரயோகம். வேதத்தில் இவ்வசனத்தில் மட்டுமே இடம் பெறுவதினால் வேதத்தில் வேறு பகுதிகளுடன் ஒப்பிட்டும் இதன்

அர்த்தத்தை அறிந்துகொள்ள முடியாதுள்ளது. சில கிறிஸ்தவர்கள் ஜலமும் பரிசுத்த ஆவியானவரை குறிக்கின்றது என கருதுகின்றனர். **பரிசுத்த ஆவியானவரின் சுத்திகரிக்கும்** செயலுக்கான **உருவகமாகவே ஜலம்** உள்ளது என்பதே இவர்களின் தர்க்கமாகும். பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்கள் எசேக்கியேல் 36:25, 27ஐ இதற்கான ஆதாரமாய் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால் **ஜலம்**, ஆவி எனும் இரு பதங்களும் **உம்** எனும் வேற்றுமையுருப்புடன் குறிப்பிடப்பட்டுள்ளமையால் இரண்டும் ஒன்றையே குறிப்பதாக விளக்க முடியாது. **மறுபடியும்** பிறத்தல் என்பது **ஆவியினால் பிறப்பது மட்டுமல்ல**. அது **ஜலத்தினாலும் பிறப்பதாகும்** என்றே இயேசு அறியத் தந்துள்ளார்.

இன்றைய கிறிஸ்தவ உலகில் ஓரளவுக்கு பிரபலமடைந்துள்ள ஒரு விளக்கம். ஜலத்தினால் பிறப்பதை இயற்கையான மானிட பிறப்பாகும். ஆவியினால் பிறப்பதை ஆவிக்குரிய பிறப்பாகவும் கருதுகின்றது. **ஒருவன் இயற்கையான முறையில் இவ்வுலகில் பிறப்பது மட்டும் போதாது,** அவன் **மறுபடியுமாக ஆவிக்குரிய பிரகாரமாகப் பிறக்கவேண்டும்** என்பதே இயேசு **நிக்கொதேமுக்கு தெரிவித்துள்ளார்** என்பதே இக்கருத்தின் தாற்பரியமாகும். இதனால் இயேசுவின் கூற்றில் ஜலம் இனவிருத்தியோடு சம்மந்தப்பட்டுள்ளது என கூறும் சில வேத ஆராய்ச்சியாளர்கள், ஜலத்தினால் பிறத்தல் என்பது சரீரபிரகாரமாக பிறத்தல் என்று விளக்குகின்றனர். இவர்கள் ஜலம் (தண்ணீர்) மழை நீர், பணித்துளி எனும் பதங்கள் அக்கால இலக்கியங்களில் ஆணின் விந்தைக் குறிக்க உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுவதில் மூலம் ஜலத்தினால் பிறத்தல் என்பது சாதாரண மானிட பிறப்பு எனத் தர்க்கிக்கின்றனர். எனினும் சாதாரண பிறப்பை ஜலத்தினால் பிறத்தல் என எவரும் அக்காலத்தில் குறிப்பிடவில்லை. எனவே இயேசு கிறிஸ்து சாதாரண பிறப்பை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என தர்க்கிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

குழந்தை பிறப்பதற்கு தாயின் கருவறையில் குழந்தையை சுற்றியிருக்கும் சவ்வு கிழிவதனால் வெளிவரும் திரவத்தையும் ஜலம் எனும் பதம் குறிக்கின்றது என்பதும் ஜலத்தை சாதாரண மானிட பிறப்பாக கருதுவோரின் விளக்கமாய் உள்ளது. எனினும் மறுபடியும் பிறத்தலையே இயேசு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தலாக குறிப்பிட்டுள்ளமையால் ஒன்றை சாதாரண பிறப்பாகவும் மற்றதை ஆவிக்குரிய பிறப்பாக கருத முடியாது. அத்தோடு இயேசுவின் கூற்றில் இரு பதங்களுமே மறுபடியும் பிறத்தலையே குறிக்கின்றன. மூலமொழியின் வாக்கிய அமைப்புமுறையானது இருவிதமான பிறப்புகளைப்பற்றி அறியத்தருவதாய் இல்லை. மறுபடியும் பிறக்கும் ஒரு பிறப்பையே இயேசு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல் என குறிப்பிட்டுள்ளார். மேலும் சிலர் தர்க்கிப்பதுபோல இயேசு கிறிஸ்து மாமிசத்தினால் பிறப்பது மாமிசமாய் இருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாய் இருக்கும் என 6ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளமையினால் அவர் இயற்கையான பிறப்பையும் இரண்டாவது பிறப்பான ஆவிக்குரிய புறப்பையுமே ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல் என குறிப்பிட்டுள்ளார் எனத் தர்க்கிப்பதிலும் அர்த்தமில்லை. ஏனென்றால் மறுபடியும் பிறத்தல் என்பதை நிக்கொதேமு **சாதாரண** பிறப்பாக எண்ணியமையினாலே இயேசு கிறிஸ்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளாரே தவிர ஜலத்தினால் பிறப்பதை அவர் சாதாரண பிறப்பாக அவர் விளக்கவில்லை.

இயேசுவின் கூற்றிலுள்ள ஜலம் எனும் பதத்தை சில கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தை எனக் கருதுகின்றனர். தேவனுடைய வார்த்தையே ஜலம் எனும் பதத்தால் உருவகிக்கப்பட்டுள்ளது எனக் கூறும் இவர்கள் ஒருவன் மறுபடியும் பிறப்பதற்கு தேவனுடைய ஆவியானவரும் தேவனுடைய வார்த்தையும் அவசியமாயுள்ளன என விளக்குகின்றனர். இவர்கள் தமது விளக்கத்தை நிரூபிப்பதற்காக மறு பிறப்புக்கு தேவனுடைய வார்த்தையின் அவசியத்தை சுட்டிக்காட்டும் வசனங்களைகுறிப்பிடுவது வழமை. உதாரணத்துக்கு **உம்முடைய வாக்கு** என்னை

உயிர்ப்பித்தது (சங் 119:50) **சுவிசேஷத்தினால்** நான் **உங்களை பெற்றேன்** (1 கொரி 4:15) நம்மை சத்திய வசனத்தினாலே **ஜனிபித்தார்** (யாக் 1:18) தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் **ஜெனிபிக்கப்பட்டிருக்கிறீர்களே** (1 பேது 1:23) போன்ற வசனங்கள் இவ்விளக்கத்துக்கு ஆதாரமாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வசனங்கள் ஒருவனது மறுபிறப்புக்குத் தேவனுடைய வார்த்தையின் அவசியத்தை சுட்டிக்காட்டுவது உண்மையாயினும் இயேசு கிறிஸ்து **நிக்கொதேமுவுடன்** உரையாடும்போது **ஜலம்** எனும் பதத்தைத் **தேவனுடைய வார்த்தையைக்** குறிப்பிட உபயோகத்துள்ளனர் எனக் கூறுவதற்கில்லை, அவர் வழமையாக எழுதியிருக்கிறது எனும் சொற் பிரயோகத்தை அல்லது பழைய ஏற்பாட்டை குறிக்கும் விவரணங்களை அல்லது நேரடியாக தேவ வார்த்தை எனும் சொற்பிரயோகத்தை உபயோகித்துள்ளாரே தவிர எந்த ஒரு இடத்திலும் ஜலம் எனும் பதத்தால் அவர் தேவனுடைய வார்த்தையைக் குறிப்பிடவில்லை.

இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள், ஜலத்தினால் பிறத்தல் என்பதை கிறிஸ்தவ ஞானஸ்நானமாகவே கருகின்றனர். இவர்களில் சிலர் ஜலத்தினால் பிறத்தல் என்பது இயேசுவின் வார்த்தைகள் அல்ல எனத் தர்க்கிக்கின்றனர். இச்சொற் பிரயோகம் சுவிசேஷத்தை எழுதிய யோவானால் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டவை என்பது சிலரது ஊகமாய் இருக்கையில் வேறு சிலர் கிறிஸ்தவ சபையில் **ஞானஸ்நானத்திற்கு முக்கியத்துவம்** கொடுக்கப்பட்ட காலத்திலேயே இச்சொற் பிரயோகம் சேர்க்கப்பட்டதாகக் கருதுகின்றனர் என்றும் இச்சொற் பிரயோகம் **பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது** என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. இது **இயேசுவின் வார்த்தையாகவே** உள்ளது.

ஜலத்தினால் பிறத்தல் என்பது கிறிஸ்தவ ஞானஸ்நானத்தையே குறிக்கின்றது என்றால், ஒருவன் மறுபடியும் பிறப்பதற்கு ஞானஸ்நானம் அவசியம் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் **சில சபைகளில் ஞானஸ்நானத்தின்** மூலம் **மறுபிறப்பு** எனும் உபதேசம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் வேதாகமத்தைப் பொறுத்தவரை **மறுபிறப்பானது** ஞானஸ்நானத்தின் மூலம் **பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அனுபவமாக விளக்கப்படவில்லை.** அதாவது ஞானஸ்நானம் எடுப்பதின் மூலம் பரிசுத்த ஆவியானவர் ஒருவனை மறுபடியும் **பிறக்க வைப்பதில்லை,** மாறாக பரிசுத்த ஆவியானவர் மூலம் ஒருவனில் ஏற்பட்ட ஆவிக்குரிய உள்ளான மாற்றத்துக்கான வெளிப்படையான அடையாளமாகவே **கிறிஸ்தவ ஞானஸ்நானம்** உள்ளது. உண்மையில் இரட்சிப்பின் அனுபவமான **மறுபிறப்பானது** தேவனுடைய **கிருபையின் ஈவாக** உள்ளதே தவிர அது **ஞானஸ்நானத்தின்** மூலம் **பெற்றுக்கொள்ளக் கூடியதொன்றாக இல்லை.** ஜலத்தினால் பிறத்தல் கிறிஸ்தவ ஞானஸ்நானமானால், இரட்சக்கப்பட்டு ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் மரிப்பவர்களை மறுபடியும் பிறக்காதவர்கள் என்றே சொல்ல வேண்டும். மேலும் இயேசு **நிக்கொதேமுவுடன்** உரையாடிய காலத்தில் **கிறிஸ்தவ ஞானஸ்நானம் நடைமுறையில் இருக்கவில்லை**. அக்காலத்தில் **புறஜாதியார் யூதர்களாக மாறினால்** அவர்களுக்குக் கொடுக்கப்படும் சுத்திகரிப்பு **ஞானஸ்நானமும்** யோவான் ஸ்நானன் கொடுத்த **மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானமுமே** நடைமுறையில் இருந்தன. எனவே அக்காலத்தில் நடைமுறையில் இல்லாத ஒன்றைப்பற்றி நிக்கொதேமுவுக்கு கூறியிருக்க முடியாது.

ஜலத்தினால் பிறத்தல் என்பது கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைப்பற்றிய விவரணமாய் இராத போதிலும் இயேசுவின் வார்த்தைகள் அக்காலத்தில் நடைமுறையில் இருந்த யோவான் ஞானஸ்நானத்தோடு தொடர்புற்றுள்ளது. உண்மையில் இயேசுவின் வார்த்தைகளைச் சரியான விதத்தில் விளங்கிக் கொள்வதற்கு அவை யாருக்கு முதலில் சொல்லப்பட்டது என்பதையும், அதை முதல் தடவை செவிமடுத்தவன் என்ன

அர்த்தத்தோடு விளங்கிக்கொண்டான் என்பதையும் நாம் அறிந்துக்கொள்ளவேண்டும். இயேசு **நிக்கொதேமுவிடம் மறுபடியும் பிறக்கவேண்டும்** என்று சொன்னபோது, அவன் இயேசுவின் கூற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாதமையினாலேயே அதை அவனுக்குப் புரியவைப்பதற்காக **ஜலத்தினாலும் ஆவியினாலும்** பிறக்கவேண்டும் எனக் கூறினார். எனவே இயேசுவின் வார்த்தைகள் நிக்கொதேமுவால் புரிந்துக் கொள்ளகூடியவிதமாகவே சொல்லப்பட்டுள்ளதை மறுப்பதற்கில்லை. உண்மையில் நக்கொதேமு மறுபடியும் பிறக்கவேண்டும் எனும் இயேசுவின் ஆரம்ப அறிவுறுத்தலைச் சரியாகப் புரிந்துகொள்ளாதமைக்குக் காரணம் யூதமதப் போதகனாக இருந்த அவன் அக்கால **யூத நம்பிக்கையின்படி** யூதனான தான் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு **மறுபடியும் பிறக்க வேண்டியதில்லை** எனக் கருதியமையேயாகும். அக்காலத்தில் **யூதர்கள் அனைவரும்** தாம் யூதர்களாகப் பிறந்துள்ளமையால் **தேவனுடைய இராட்சியத்துக்குள்ளேயே பிறந்திருக்கிறோம்** என்றே நம்பினார்கள். அவர்களைப் பொறுத்தவரை புறஜாதியார் மட்டுமே, அவர்கள் தேவனுடைய ராட்சியத்துக்குள் பிறக்க வேண்டும் எனக் கருதினர். அதனால்தான் **யூதனான நிக்கொதேமுவைப்** பார்த்து ம**றுபடியும் பிறக்க வேண்டும்** என இயேசு கூறியபோது அவன் ஆச்சரியப்பட்டான்.

யூதர்களின் அக்கால நம்பிக்கைக்கு முற்றிலும் எதிராக, அவர்களும் மறுபடியும் பிறக்க வேண்டும் என இயேசு கூறினார், யூதர்கள் நினைத்தக்கொண்டிருந்த விதமாக யூதராகப் பிறந்தமையால் அவர்கள் தேவனுடைய ராட்சியத்துக்குள் சென்று விடவில்லை அவர்களும் மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியமாயிருந்தது, இந்த ஆவிக்குரிய பிறப்பே ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல் என விளக்கப்பட்டுள்ளது, இயேசு நிக்கொதேமுவுடன் உரையாடிக்கொண்டிருந்த காலம் யூதர்கள் மத்தியில் யோவான் ஸ்நானன் பணிபுரிந்த நாட்களாகும், அக்காலத்தில் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பிய யூதர்களும் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்று வந்தனர். யோவான் கொடுத்து வந்தான். (லூக் 3:6-21 யோவா 1:25) இதனால் அக்காலத்தில் **ஜலத்தினால் பிறத்தல்** எனும் சொற் பிரயோகம் **யோவான் கொடுத்து வந்த ஞானஸ்நானத்தையே சுட்டிக்காட்டுவதாய்** இருந்தது. **இது மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானமாகும், மறுபடியும் பிறப்பதற்கு ஒருவன்** தன் **பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டியது** அவசியமாயிருப்பதானால், இதை அக்காலத்தில் **நிக்கொதேமு** விளங்கிக் கொள்ளக்கூடிய விதமாக **ஜலத்தினால் பிறத்தல்** என இயேசு குறிப்பிட்டுள்ளார். எனவே நிக்கொதேமு யூதனாயிருந்தும் அவனும் **தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி** பரிசுத்த ஆவியானவரின் செயலினால் **மறுபடியும் பிறக்க வேண்டும்** என்பதை இயேசு இவ்விதமாக அவனுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார், எனவே இயேசுவின் வார்த்தைகளில் ஜலம் என்பது யோவான் ஸ்நானனின் மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

## மற்றொரு கருத்து....

யோ. 3:35ல் நிககொதேமுவோடு இயேசு சொன்ன ஜலத்தினாலும் – ஆவியினாலும் என்ற வார்த்தை ஒரேஅர்த்தம் உடையது. ஜலமும் – ஆவியும் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும். இரு வார்த்தை பிரயோகமாகும்.

மத். 3:11ல் அவர் பரிசுத்த ஆவியினாலும் – அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். என்ற வார்த்தை மறுபடியும் பிறப்பை குறிப்பதல்ல என்றாலும் ஒரே அர்த்தமுள்ள வார்த்தைக்கு இரண்டுவித வார்த்தை சொற் பிரயோகம் கெடுக்கப்பட்டுள்ளது. எபிரேயர்கள் சரித்திரம் எழுதும்போது ஒரு அர்த்தத்துக்கு இரண்டு சொற்களை உபயோகிக்கும் வழக்கம் உண்டு. அதை Paralisam என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். ஆமென்,

ஆமென், மெய்யாகவே. மெய்யாகவே ஜலத்தினாலும் – ஆவியினாலும் இப்படி பல சொற்கள் உண்டு. ஆனால் நிக்கொதேமுவுக்கு கூறப்பட்டது ஒரே அர்த்தம் உள்ள இரண்டடு வார்த்தைகள் ஜலம் – ஆவி என்ற வார்த்தைகளும் மனம் திரும்புதலுக்காகவே சொல்லப்பட்டது. இப்படியும் சில கருத்துக்களை வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். வாசகர்கள் இதை அறிய வேண்டும் என்பதற்காக இதை எழுதினேன். வாசகர்கள் மனம் திரும்புதலை முக்கியப்படுத்துங்கள் அது போதும்.

## வேத ஆராய்ச்சி – 4

## பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவரும் (யோவான் 3:13)

இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள். அவர் யார் என்பதையும் அவரது தன்மை எத்தகையது என்பதையும் அறியத்தருவது உண்மையென்றாலும், அவர் யோவான் 3:13ல் தன்னைப்பற்றி வெளிப்படுத்திய முக்கியமான ஒரு விடயம் இன்று அநேகரால் புரிந்து கொள்ள முடியாததொன்றாய் உள்ளது. ஏனென்றால் **நிக்கொதேமுவுடன்** உரையாடிக்கொண்டிருந்த இயேசு **பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான** மனுஷ குமாரனேயல்லாமல் **பரலோகத்துக்கு ஏறினவன்** ஒருவனுமில்லை எனத்தெரிவித்துள்ளார். (யோவான் 3:13) இயேசுவின் கூற்றிலுள்ள ஆரம்ப வார்த்தையானது அவர் **எங்கிருந்து வந்துள்ளார்** என்பதை அறியத்தருகிறது, அக்கால **யூதர்கள் நினைத்துக் கொண்டிருந்ததுபோல அவர் நாசரேத்தில்** இருந்த வந்தவரல்ல, இயேசு நாசரேத்தில் வாழ்ந்தவராயிருந்தாலும் அவர் **பரலோதகத்திலிருந்து வந்த மேசியாவாயிருக்கிறார்.** புதிய ஏற்பாட்டில் பல தடவைகள் இவ்விடயம் நேரடியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது, **தான் பரலோகத்திலிருந்து** வந்துள்ளமையால் தன்னால் **பரலோக விடயங்களைப்** பற்றி அறிவிக்க முடியும் என்பதை இதன் மூலம் இயேசு **நிக்கொதேமுக்கு** சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையில் இயேசுவின் கூற்றிலுள்ள அடுத்த வாக்கியமே இன்றைய கிறிஸ்தவ உலகில் அதிக சர்சைக்குரியதாய் உள்ளது. இதற்குக் காரணம், **பரலோகத்திலிருக்கிறவருமான** எனும் சொற்பிரயோகத்தை இன்று பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்கள் இயேசுவினால் சொல்லப்பட்ட வார்த்தைகளாக ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதேயாகும். உண்மையில் **பரலோகத்திலிருக்கிறவருமான** எனும் சொற்பிரயோகம் சில பழைய வேதப் பிரதிகளில் சேர்க்கப்பட்டது என்று கூறும் பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்களின் தர்க்கத்துக்கு போதுமான ஆதாரங்கள் இல்லை. ஆனால் ஏற்கனவே வேதத்தில் இருந்த **இச்சொற்பிரயோகம்** அக்காலத்தில் **வேதத்தைப் பிரதி பண்ணியவர்களினால்** தவறாக விடப்பட்டிருப்பதற்கு **போதுமான காரணங்கள்** உள்ளன. அநேகமாக வேதத்தைப் **பிரதிபண்ணிய** ஒருவர் **மனுஷகுமாரன் பூமியிலிருக்கும்போதே** நிக்கொதேமுவுடன் **பேசிக்கொண்டிருந்தமையால்,** ஒரே சமயத்தில் அவர் **பரலோகத்தில் இருக்க முடியாது** எனும் எண்ணத்துடன் இச்சொற் பிரயோகத்தைப் சில மொழிபெயர்ப்புகளில் **பிரதி பண்ணாமல்** விட்டிருக்கலாம். எப்படியாயினும் **இச்சொற்பிரயோகம் இயேசுவின் வார்த்தையாகவே** உள்ளது.

இயேசு கிறிஸ்து தான் **பரலேகத்திலிருந்து** பூமிக்கு வந்தாலும் தான் இன்னும் **பரலோகத்திலேயே** இருப்பதாக இவ்வசனத்தில் தெரிவித்துள்ளார். அவர் **பரலோகத்திறங்கினவரும்** அதே சமயம் **பரலோகத்திலிருக்கிறவருமாய்** இருக்கிறார். அவர் நிக்கொதேமுவுடன் பேசிக்கொண்டிருந்த சமயத்திலும் **பரலோகத்திலேயே** இருந்தார். உண்மையில் அவர் மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த போதிலும் பிதாவுடன்

பரலோகத்தில் **இருந்துள்ளார்.** இவ்வசனமானது **இயேசுவின் தெய்வீக தன்மையில் ஒன்றானது** அவர் ஒரே சமயம் **எங்குமிருக்கும்** தன்மைக்கு **ஆதாரமாய்** உள்ளது. இயேசு **மனிதனாக வந்த தெய்வம்** என்பதை இவ்வசனம் உறுதிப்படுத்துகிறது. இயேசு மனிதனாக இவ்வுலகில் இருந்த காலத்திலேயே இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே **அவர்கள் நடுவில் இருக்கிறேன்.** (மத்18:20) எனத் தெரிவித்துள்ளதால் அவர் ஒரு நேரத்தில் எங்குமிருக்கும் தன்மைக்கான **இன்னுமொரு ஆதாரமாய்** உள்ளது.

இயேசுவின் கூற்றிலுள்ள அடுத்த வாக்கியமும் இன்று அநேகரால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது, ஏனென்றால் மனுஷ குமாரனைத்தவிர **பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை** என இயேசு குறிப்பிட்டுள்ளமையால் அவர் இவ்வுலகுக்கு வந்த பின்னரும் அவர் **பரலோகத்துக்கும் போய்** வந்துள்ளார் எனச் சிலர் கறுதுகின்றனர் எனினும் பரலோகத்திலிருந்து இயேசு பூமிக்கு வந்த சமயத்திலும் அவர் பரலோகத்திலும் இருந்துள்ளமையால் அவர் பரலோகத்திற்கு போய் வரவேண்டிய நிலையில் இருக்கவில்லை. மேலும் இவ்வசனத்தை ஆதாரம் காட்டி இதுவரையில் எவரும் பரலோகத்துக்கு போகவில்லை என்றும் பலர் கருதுகின்றனர். ஆனால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் **ஏனோக்கு எலியா** என்போர் பரலோகத்துக்கு போனதாக வேதம் கூறுகிறது. ஆனால் இது அந்த ரெண்டு பேர்க்கு மட்டும்கொடுக்கப்பட்ட சலுகையாகும். அதில் தேவ திட்டம். (எபி. 11:5, 2 ராஜா 2:11) எனவே இயேசு தன்னைத்தவிர எவரும் பரலோகத்துக்குப் போகவில்லை எனக் குறிப்பிட்டது அநேகருக்கு குழப்பத்தையே ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் இயேசுவின் வார்த்தைகளைச் சரியான விதத்தில் புரிந்துகொள்வதற்கு மூலமொழியின் உதவி தேவைப்படுகிறது, ஏனென்றால் மறுபடியும் திரும்பி வரும் விதத்தில் எவரும் பரலோகத்துக்குச் செல்லவில்லை என்பதே மூலமொழியில் இயேசுவினுடைய கூற்றின் அர்த்தமாயுள்ளது. அக்காலத்தில் பரலோகத்துக்குப் போய் வந்த பரிசுத்தவான்களைப் பற்றிய கதைகள் யூதர்கள் மத்தியில் பிரபல்யமடைந்திருந்தன. இதனால் அவ்வாறு எவரும் பரலேகத்துக்குப் போய் வரவில்லை என்றே இயேசு இவ்வசனத்தின் மூலம் அறியத் தருகிறார். இயேசு மட்டுமே பரலோகத்திலிருந்து வந்துள்ளார். அவர் பூமியிலிருந்த காலத்திலும் பரலோகத்தில் இருந்துள்ளார். இதனால் அவரால் மட்டுமே பரலோக காரியங்களை மக்களுக்கு அறிவிக்க முடியும் என்பதே இவ்வசனத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளும் சத்தியமாகும்.

## அது இவன் செய்த பாவமுமல்ல (யோவான் 98:3)

இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் கிறிஸ்தவர்களால் கிரகித்துக்கொள்ள கடினமாயிருக்கும் விடயம்., அவர் பிறவிக் குருடனொருவனைப் பற்றிக் கூறியவைகளாகும். பொதுவாகக் கிறிஸ்தவர்கள் மானிட வியாதிகளுக்கும், குறைபாடுகளுக்கும், துயரங்களுக்கும் பாவமே காரணம் என நம்புவதனால் ஒரு பிறவிக் குருடனைக் காண்பித்து இவன் இப்படிப் பிறக்கப் காரணம் யார் செய்த பாவம் எனச் சீடர்கள் கேட்டபோது இயேசுகிறிஸ்து, அது **இவன் செய்த** பாவமுமல்ல, **இவனைக் பெற்றவர்கள்** செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான். (யோவான் 9:2-3) எனக் கூறியமை ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு விளக்கமாகவே தென்படுகிறது. இயேசுவின் வார்த்தைகள், மானிடக் குறைபாட்டுக்கும் பாவத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனும் அர்த்தத்துடன் உள்ளமையே இதற்கான காரணமாகும். உண்மையில் சகல துயர்களுக்கும் பாவமே காரணம் எனும் பொதுவான கிறிஸ்தவ நம்பிக்கைக்கு முரணாக இயேசுவின் வார்த்தைகள் இருப்பதனால் இது கிரகிப்பதற்கு கடினமான ஒரு விளக்கமாகவே உள்ளது.

பிறவிக் குருடனைக் கண்டபோது சீடர்கள் **இயேசுவிடம் கேட்ட கேள்வி** அக்கால யூத **மக்களுடைய நம்பிக்கையை அடிப்படையாய கொண்டுள்ளது.** பிறவிக் குருட்டுக்குப் பாவம் தான் காரணம் என்பதில் சீடர்களுக்கு எவ்வித சந்தேகமும் இராததமையினால், அவர்கள் பாவமா இதற்கு காரணம்? எனக் கேட்காமல் **யார் செய்த பாவம்?** எனக் கேட்டனர். இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம். இவன் செய்த பாவமோ இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ? என்பதை அவர்களது கேள்வியாயிருந்தது. சீடர்களின் கேள்வியில் நமக்குச் சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்தும் விடயம், இவன் செய்த பாவம் எவ்வாறு இவனது குறைபாட்டுக்கு காரணமாயிருக்கும் என்பதாகும். ஏனென்றால் **இவன் பிறவியிலேயே குருடனாய் இருப்பதனால் பாவம் செய்வதற்கு இவனுக்கு சந்தர்ப்பமே இருக்கவில்லை என நாம் எண்ணலாம்.** ஆனால் அக்கால யூதர்கள் மானிட சரீரத்துக்குள் வருவதற்கும் முன்பே ஆத்தும உலகில் இருக்கின்றது என நம்பினர். எனவே **பிறவிக் குருடனுக்குள் இருக்கும் ஆத்துமா** அவன் பிறப்பதற்கும் முன்பே பாவம் செய்திருக்கலாம் என சீடர்கள் எண்ணினர்.

ஒருவன் தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதும் பாவம் செய்வான் எனும் தவறான நம்பிக்கை **யூதர்கள் மத்தியில் இருந்தது.** யூத மதப் போதகர்கள் ஆதியாகமம் 25:22ஐ ஆதாரமாய்க்கொண்டு அதாவது ரெபேக்காளின் வயிற்றில் ஏசாவும் யாக்கோபும் **ஒருவரோடொருவர் மோதிக்கொண்டார்கள்** எனும் கூற்றை **அடிப்படையாய்க்கொண்டு இவ்வாறு போதித்தனர்.** இருவரும் ஒருவரையொருவர் வயிற்றில் இருக்கும் போதே கொல்ல முயற்சித்தார்கள் என்பதே இவ்வசனத்துக்கு யூத மதப் போதகர்கள் கொடுத்துள்ள விளக்கமாகும். சங்கீதம் 58:3ன் படி ஏசா தாயின் வயிற்றிலேயே துன்மார்க்கனாய் இருந்ததாக அவர்கள் விளக்கினர். பிறவிக் குருடனுடைய குறைபாட்டுக்கு அவன் செய்த பாவமா காரணம் எனச் சீடர்கள் கேட்டதற்கு இத்தகைய அன்றைய தவறான நம்பிக்கையே அடிப்படையாய் உள்ளது.

யூதர்கள் மத்தியில் இருந்த இன்னுமொரு நம்பிக்கை ஒருவனுடைய **பெற்றோர் செய்த பாவமும்** அவனைப் பாதிக்கும் என்பதாகும். பெற்றோருடைய பாவத்தை பிள்ளைகளிடத்தில் தேவன் விசாரிப்பதாகப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது, (யாத் 20:5, 34:7, எண் 14:18, சங், 109:14, ஏசா 65:6,7) மனைவியைத் தவிர வேறு பெண்களைப் பார்க்கக் கூடாது எனப் போதித்த யூத மதப் போதகர்கள் **இன்னுமொரு பெண்ணின் பாதங்களை ஒருவன் பார்த்தால்** அவனுக்குப் பிறக்கும் பிள்ளை துன்மார்க்கனாய் இருப்பான் என் விளக்கினார். மேலும் தன் சொந்த மனைவி விலக்காய் இருக்கும்போது அவளை இவ்வாறு பார்த்தாலும் இதே விளைவு ஏற்படும் என்றும் அவர்கள் போதித்தனர். மேலும் ஏசாவும் யாக்கோபும் தாயின் வயிற்றில் மோதிக்கொண்டதை ஆதாரமாய்க்கொண்டு ரெபேக்காள் ஜெபாலயத்தைக் கடந்து செல்லும் போது யாக்கோபு வெளியே வர முயற்சித்தாகவும் அவள் விக்கிரக கோவில்கள் இருக்கும் பாதையில் நடந்துசெல்லும்போது **ஏசா யாக்கோபை** முந்திக்கொண்டு வெளியே வரப்பார்த்தான் என்றும் போதித்தனர். இவ்விதமாகப் பெற்றோரின் சகல செயல்களும் பிள்ளைகளைப் பாதிப்பதாக யூதர்கள் நம்பினர். எனவே பிறவிக் குருடனைக் கண்டபோது இவன் இப்படிப் பிறக்க இவனது பெற்றோர் செய்த பாவமா என்றும் சீடர்கள் கேட்டனர்.

சீடர்களின் கேள்விக்கான இயேசுவின் பதில் அவரகளது எதிர்பார்புக்கு முற்றிலும் எதிரானதாகவே இருந்தது. அது இவன் செய்த பாவமுமல்ல இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல என்றார் இயேசு. எனினும் இயேசுவின் வார்த்தைகளை மானிட பாவத்துக்கும் வியாதிக்கும் எவ்வித தொடர்பபும் இல்லை என்னும் போதனையாக கருத முடியாது, ஏனென்றால் அவர் வேறு சந்தர்ப்பங்களில் பாவம் மானிட வியாதிக்குக் காரணம் என்பதை தெரிவித்துள்ளார். யோவான் எழுதிய சுவிசேஷத்திலேயே 38 வருடங்களாக வியாதிப்பட்டிருந்த ஒரு

மனிதனைக் குணமாக்கிய இயேசு இதோ நீ சொஸ்தமானாய். அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி **இனிப் பாவம் செய்யாதே.** (யோவா. 5:14) எனக் கூறியதிலிருந்து அம்மனிதனுடைய வியாதிக்கு அவனது பாவமே காரணம் என்பதை இயேசு சுட்டிக்காட்டுவது தெளிவாகின்றது. ஆனால் பிறவிக் குருடனைப் பெறுத்தவரை அவன் குருடனாய்ப் பிறந்ததற்கு எவர் செய்த பாவமும் நேரடிக் காரணமாயிருக்கவில்லை. இயேசுவின் வார்த்தைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விடயம் யாதெனில் பிறவிக் குருடனுடைய குறைபாட்டுக்கு எந்த ஒரு தனிப்பட்ட பாவமும் காரணம் அல்ல என்பதாகும். அதாவது அவர் இங்கு பொதுவான உபதேசத்தைப்பற்றி குறிப்பிடாமல் தனிப்பட்ட ஒருவனுடைய நிலைமையைப்பற்றியே கூறுகிறார். பாவமே மானிட துயரங்கள் எல்லாவற்றிக்கும் மூல காரணமாயினும் நமக்கு நேரிடுகின்ற துயரங்கள் அனைத்துமே நம் தனிப்பட்ட பாவத்தின் விளைவு எனக் கூறுவது தவறாகும். ஏனென்றால் நாம் பாவம் செய்யாத போதும் துயரங்கள் வரும். உதாரணத்துக்கு **யோபுக்கு நேரிட்ட துயரங்களுக்கு** அவனது பாவங்கள் காரணமாயிருக்கவில்லை. தேவனுடைய சித்தத்தின்படி வாழும் போதும் நமக்குத் துயரங்கள் வரும் என்பதற்கு வேதத்தில் அநேக ஆதாரங்கள் உள்ளன. (பிலி 1:30 2 தீமோ 1:11-12, 2:9 1 பேது 1:6-7) எனவே மானிட துயரங்களுக்கான காரணங்களைக் குறிப்பிடும் போது நாம் பொதுவான விளக்கங்கள் கொடுப்பதைக் தவிர்த்து கொள்ளவேண்டும்.

பிறவிக் குருடனைப்பற்றி குறிப்பிட்ட இயேசு தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான் என்றும் தெரிவித்தார். (யோவா 9:3) இவ்வார்த்தைகள் தேவனுடைய கிரியைகள் வெளிப்படுவதற்காகவே அவன் குருடனாக படைக்கப்பட்டான் எனும் அர்த்தத்தைத் தருவதாக நாம் எண்ணலாம். ஆனால் மூல மொழியில் இவ்வாக்கியத்தின் இலக்கண அமைப்புமுறையின்படி **இவன் இப்படி பிறத்ததன் நிமித்தமாகத் தேவனுடைய கிரியைகள் வெளிப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது** எனும் அர்த்தத்தைத்தரும் விதத்திலேயே இயேசுவின் வார்த்தைகள் உள்ளன. அதாவது இவன் குருடனாகப் பிறந்தமையால் இயேசு ஒரு அற்புதத்தைச் செய்து தேவனுடைய கிரியையை அவனுடைய வாழ்வில் நடப்பிக்கப்போகிறார். எனவே நாம் இயேசுவின் சீடர்களைப் போல ஒவ்வொரு துயருக்கும் பின்னால் இருக்கும் காரணத்தைக் கண்டறியும் பணியில் மூழ்கிவிடாமல் அவற்றில் தேவனுடைய கிரியைகள் வெளிப்படுவதை எதிர்பார்க்க வேண்டும். பாவம்தான் சகல துயரங்களுக்கும் மூலகாரணம் என்பதை நன்கறிந்திருந்த இயேசு. தனிப்பட்ட ரீதியாக ஒவ்வொரு துயரத்துக்கும் காரணமாக குறிப்பிட்ட எந்தப் பாவம் உள்ளது என்பதை ஆராய்ந்து கொண்டிராமல் மானிட வாழ்விலிருந்து துயரங்களை அகற்றுவதில் அதிக அக்கறை கொண்டிருந்தார்.

## வேத ஆராய்ச்சி – 5

# பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார் (யோவான் 14:28)

இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் சில வாக்கியங்கள் புரிந்துகொள்வதற்கு சிரமமானவைகளாக இருப்பதினால் பலர் அவரை தவறாக புரிந்துகொண்டுள்ளனர். யோவான் எழுதிய சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இத்தகைய கூற்றுகளில் ஒன்று அவரது தன்மையையும் தேவத்துவத்தையும் சர்வ வல்லமையும் அநேகர் சந்தேகிப்பதற்கும், மறுதலிப்பதற்கும் காரணமாய் உள்ளது. ஏனென்றால் அவர் பிதவாகிய தேவனைப் பற்றி குறிப்பிடும்போது **என் பிதா என்னிலும் பெரியவராய் இருக்கிறார் என தெரிவித்துள்ளார்.** யோவா. (14:28) இயேசு கிறிஸ்துவின் தேவத்துவத்தை மறுதலிக்கும் அனைவரும் தமது உபதேசத்துக்கு ஆதாரமாய் உபயோகிக்கும் வசனங்களில் இதுவும் ஒன்றாகும். **இயேசு கிறிஸ்துவே என் பிதா என்னிலும் பெரியவர்** என கூறியுள்ளமையால்

இயேசு பிதாவை விடத் **தாழ்வானவர்** என்றும் பிதாவுக்கு சமமான வல்லமையும் தெய்வீகமும் அற்றவர் என்றும் போதிப்பதற்கு இவ்வசனத்தை உபயோகித்து வருகின்றனர்.

இயேசு கிறிஸ்துவின் கூற்றுகளை சரியான விதத்தில் விளக்கிக்கொள்வதற்கு இயேசு கூறிய அந்த வார்த்தை எச்சந்தர்ப்பத்தில் **சொல்லப்பட்டவை** என்பதை நாம் முதலில் அறிந்துகொள்ளவேண்டும். இன்று பலவிதமான உபதேசக் குழப்பங்கள் கிறிஸ்தவர்களுக்கு புகுந்துள்ளமைக்கு பிரதமான காரணம் கிறிஸ்தவர்கள் வேத வசனங்களை வியாக்கியானம் செய்யும்போது அவை **சொல்லப்பட்ட சந்தர்ப்பத்தை** கருதிக்கொள்ளாமல் அவற்றை அப்படியே வியாக்கியானம் செய்வதேயாகும். உண்மையில் இயேசு கிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்திலேயே **என் பிதா என்னிலும் பெரியவராய் இருக்கிறார்** என்றும் கூறினார். பிதாவாகிய தேவனுக்கு சமமான நிலையில் **பிதாவைப்போல தேவ மகிமையுடன் இருந்த இயேசு கிறிஸ்து** தனது பரலோக மகிமையை விட்டு மனிதனாக **தாழ்வான நிலைக்கு வந்தார்.** இதைப்பற்றி வேதம் விளக்கும்போது பிலிப்பியர் 2:6-7ல் அவர் தேவனுடைய ரூபமாய் இருந்தும் **தேவனுக்கு சமமாய் இருப்பதை** கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் **தம்மை தாமே** வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து **மனுஷ சாயலானார்** என் குறிப்பிட்டுள்ளது. இவ்வசனத்தில் கொள்ளையாடின பொருளாய் எண்ணாமல் என தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சொற் பிரயோகம், மூலமொழியில் பற்றிபிடித்துக்கொண்டிராமல் என் பொருள்படும். எனவே **இயேசு தேவனுக்கு சமமாய் இருக்கும் நிலையைப்பற்றி கொண்டிராமல்** அதைவிட்டு **தாழ்வான நிலையில்** பூமிக்கு வந்துள்ளார்.

இயேசு பிதாவை விட தாழ்வான நிலைக்கு வந்தாலும் **அவர் தேவத்துவத்தை துறந்துவிட்டு வரவில்லை** என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும். **தேவனோடு சமமாக பரலோகில் இருக்கும் நிலையையே** அவர் விட்டு வந்துள்ளார் என்பதை நாம் மறக்கலாகாது. இயேசு இவ்வுலகை விட்டு மறுபடியுமாய் பிதாவிடம் செல்வதற்கு முன்பு அவரோடு பேசுகையில் பிதாவே உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிந்த மனிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலேயே மகிமைப்படுத்தும் எனக் கூறியமை (யோவா,. 17:50 அவர் **பிதவினிடத்தில் தனக்கிருந்த மகிமையையே விட்டு இவ்வுலகுக்கு** வந்துள்ளார் என்பதை சுட்டிகாட்டியுள்ளார். பிலிப்பியர் 2:6-7ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் என்பதிலும் **ருபம் என்பதற்கு** உபயோகப்பட்டுள்ள மோர்ஃபி (Morphe ) எனம் கிரேக்க பதம். **உட்புறத் தன்மையை குறிக்கும் பதமாகும்.** எனவே இது இயேசுவின் தெய்வீகத் தன்மையும் குணவியல்பையும் சுட்டிக்காட்டுகிறது. இயேசு கிறிஸ்து இவற்றை விட்டு வந்ததாக வேதம் கூறவில்லை. ஆதியிலிருந்தே தெய்வீக வார்த்தையாயிருந்த அவர் (யோவா. 1:1) மாம்சமாகிய போது **தெய்வத்தன்மையை இழந்து மாமிசமாக மாறிவிடவில்லை.** (யோவா 1:14) வார்த்தை மாமிசமாகி எனும் வாக்கியத்தில் **ஆகி** எனும் பதம் மூலமொழியில் சிறப்பான அர்த்தமுடையது இது. ஒன்றிலிருந்து இன்னுமொன்றாக மாறியதை அல்ல. மாறாக **முன்பு இருந்த நிலையோடு** இன்னுமொரு **புதிய நிலை சேர்க்கப்பட்டதையே** குறிக்கின்றது. அதாவது இயேசு மனிதனாக இவ்வுலகத்துக்கு வந்து தெய்வீகத் தன்மைகளை துறப்பது அல்ல. மாறாக மானிட தன்மைகளைக் சேர்ப்பதையே அடிப்படையாக கொண்டுள்ளது எனவே இயேசு **இவ்வுலகில் மனிதனதாக வாழ்ந்த காலத்திலும் தேவனாகவே இருந்தார்.**

இயேசு இவ்வுலகத்தில் மனிதனாக வாழ்ந்த காலத்தில் முழுமையான தேவனாக இருந்த போதிலும் பிதாவைவிடத் தாழ்வான நிலையிலேயே இருந்தார். ஏனென்றால் **பிதா** பரலோகத்தில் **மகிமை பொருந்தியவராய்** இருந்தார். ஆனால் **இயேசுவோ,** பூலோகத்தில் **ஏழ்மை நிலையில் வாழ்ந்தார்,** உண்மையில் இத்தகைய நிலையைக் கருத்திற்கொண்டே இயேசு, **என்பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்** என் கூறினார். இயேசு

கிறிஸ்து தான்அச்சமயம் இருந்த நிலையையும் பிதாவின் நிலையையும் ஒப்பிட்டே இவ்வாறு கூறியுள்ளார். எனினும் அவர் எப்போதும் இவ்வாறு தாழ்த்தப்பட்ட நிலையிலேயே இருந்துவிடவில்லை. உலக மாந்தருடைய பாவங்களைப் பரிகரிப்பதற்காகத் தன்னைப் பலியாக்க இவ்வுலகுக்கு வந்த அவர், பாவபலியாக சிலுவையில் மரித்த பின்னர் உயரோடெழுந்து **மறுபடியுமாகத்** தான் முன்பிருந்த **அதி உன்னத நிலைக்கு சென்றுவிட்டார்.** அவர் எல்லாவற்றிற்கும் மேலான நிலைக்கு உயர்த்தப்பட்டதை பிலி 2:9-11 அறியத்தருகிறது. உண்மையில் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்தபோது அவர் கூறியவை உயர்த்தப்பட்ட நிலைக்குப் பொருந்ததாது. எனவே **தற்காலிகமாக அவர் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்தபோது** கூறியவற்றை ஆதரமாய்க்கொண்டு,அவர் பிதாவை விடத் தாழ்வானவர் எனத் தர்க்கிப்பது தவறாகும். இயேசுவின் இக்கூற்று அவருடைய **தற்காலிக நிலையைப்** பற்றியதேயன்றி அவருடைய தன்மையைப் பற்றியது அல்ல என்பதை நாம் மறக்கலாகாது இயேசு மனிதாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும் யோவான் 10:30ல் குறிப்பிட்டுள்ளபடி அவரும் பிதாவும் ஒரே தன்மையுடையவர்களாகவே இருந்தனர். எனவே **இயேசு பிதாவைவிட தாழ்வானவர் அல்ல.**

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



மதுரை திரு. S. தனபாலன் அவர்களின் மனைவி திருமதி **டெய்சி தனபாலன்** அவர்கள் பெப்ரிவரி மாதம் மரித்துப்போனார். திருமதி டெய்சி தனபாலன் அவர்கள் தாசில்தார் என்ற உயர்ந்த பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர். லஞ்ஜம் வாங்காத, ஏழை எளியவர்களுக்கு தன் தாசில்தார் பணிமூலம் அலுவலக விஷயமாக எண்ணெண்ண உதவி செய்யமுடியுமோ அவைகளை செய்து மக்களால் நற்சாட்சி பெற்றவராகும். இவர் இரட்சிக்கப்பட்ட நல்ல விசுவாசியாகும்.

புதுக்கோட்டை நகரில் முதன் முதல் என்னை அழைத்து ஆவிக்குரிய கூட்ட ஏற்பாடுகளை செய்தவர். அன்று முதல் மரிக்கும் வரை என்னொடும், என் மனைவியுடனும் நல்ல ஆவிக்குரிய தொடர்பு வைத்திருந்தார்.

பெண்கள் மத்தியில் சிறப்பான ஊழியங்களை செய்து அனேக சகோதரிகளுக்கு ஆறுதலில் தாயாய் வாழ்ந்தவர். பல இடங்களில் பெண்கள் மத்தயில் ஐக்கிய ஜெப கூட்டங்கள் ஏற்பாடு செய்து மற்றவர்களுக்காக ஜெப குறிப்புகள் எழுதி மணிக்கணக்காக ஜெபிக்கிறவர். இவருக்கு இவர் கணவர் கதாகலட்சேபம் நடத்தி ஊழியம் செய்து வருகிறார். இரண்டு பிள்ளைகளில் ஒருவர் இறந்துபோனார். மற்றொரு மகன் Rev. கென்னடி என்பவர் படிப்பில் உயர்ந்து. மரண ஆபத்தான யுத்தம் நடந்துகொண்டிருக்கும் நாட்டில் சமூக தொண்டுடன் கூடிய ஊழியம் செய்கிறார்.

சகோதரி டெய்சி தனபாலன் அவர்கள் நெடுங்காலமாய் ஜாமக்காரன் வாசக குடும்பத்தில் ஒருவராவார். அவரின் சாட்சியுள்ள வாழ்க்கைக்காக நாங்கள் குடும்பமாய் தேவனை துதிக்கிறோம். தனது 81 வயதிலும் தன் கணவருடன் ஊழியத்தில் பங்குகொண்டவர். கர்த்தர் தாமே அவர் குடும்பத்திற்கு ஆறுதலை அளிப்பாராக.

# மலேசியா ஊழியங்கள்







மலேசியாவில் முதல் கூட்டம் பினாங்கில் உள்ள Victory Lutheran Churchல் நடந்தது. Rev. மைக்கல் ஜான் அவர்கள் தலைமை ஏற்று இக்கூட்டங்களை மிகவும் சிறப்பாக நடத்தினார். ஆயர் அவர்களின் மனைவி திருமதி லிடியா அவர்கள் ஆயர் அவர்களுக்கு ஜெபத்தில் மிகவும் பின்பலமாக இருந்தார். அம்மையார் அவர்களின் ஜெப வாழ்க்கை குடும்பத்தில் பிள்ளைகளை அவிக்குரிய பிள்ளைகளாவும், சாட்சியுள்ள பிள்ளைகளாகவும் வளர்த்துவர காரணமாக இருந்தார். மகன் Dr. பீட்டர், M.D. அவர்கள் ஆயர் அவர்களுக்கு ஊழியத்தில் பின்துணையாக இருக்கிறார்.

இங்கு ஒரு பகல் வேத ஆராய்ச்சி கூட்டம் கேள்வி – பதில் பகுதியும் ஏற்பாடு செய்திருந்தார்கள், மற்ற சபைகளிலிருந்தும் பகல் கூட்ட த்தில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர், கூட்டம் மிகவும் பிரயோஜனமாக அமைந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

---




**பினாங்கில் மற்றொரு பாகத்தில் அமைந்துள்ள லூத்தரன் கிளை சபையிலும் கர்த்தருடைய செய்தியை பகிர்ந்துகொண்டேன்.**

# Bayan Lepas Tamil Baptist Church



மலேசியாவில் என் ஆரம்ப கால நண்பரும் நல்ல வேத ஞானம் உள்ளவருமான மரித்துப்போன பாஸ்டர் சாம் வெங்கடேசன் அவர்கள் உருவாக்கிய பாப்திஸ்து சபையில் கர்த்தருடைய செய்தியை பகிர்ந்துகொண்டேன். இங்கு நடந்த ஆராதனையில் மிக அதிகமாக விசுவாசிகள் கலந்துகொண்டனர். என் செய்தியை கேட்பதற்கென்றே மற்ற சபைகளிலிருந்தும் மக்கள் வந்திருந்தார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

---

## Johur Bharu குடும்ப கூடுகை

நல்ல இரட்சிக்கப்பட்ட ஆவிக்குரிய குடும்பங்களாக மாத்திரம் ஒன்று சேர்ந்து நடத்தப்பட்ட இக்கூட்டங்கள் என் மனதற்கு மிகவும் திருப்தியாக சபை எனறால் என்ன? சபை மூப்பர்கள் தகுதி , ஆவிக்குரிய ஜீவிய வளர்ச்சி ஆகியவைகளை வேத வசன ஆதாரத்தோடு பேசிதை மகவும் கவணமாக கேட்டதோடு மட்டுமல்லாது ஆவிக்குரிய கேள்விகளை கேட்டு தெளிவு பெற்றார்கள். சகோ. ஐசக் அவர்கள் இந்த நல்ல கூடுகை ஏற்பாட்டை செய்திருந்தார்.

---

## (கோலாலம்பூர்) Port Klang லூத்தரன் சர்ச் கூட்டங்கள்

மலேசியாவில் இங்கு நடந்த இக்கூட்டங்களும் மிகவும் பிரயோஜனமாக இருந்தது. ஏராளமான ஜாமக்காரன் வாசகர் குடும்பங்களையும் நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது. இக்கூட்ட ஏற்பாடுகளை Rev. ஹென்றி அவர்கள் பொறுப்பேற்று ஏற்பாடு செய்தார். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

# 2020ல் என் ஊழிய விவரங்கள்

**ஜாமக்காரன்:- காவல் துறை கமிஷனர் அவர்கள் என்னிடம் கூறியதாவது....**

உங்கள் ஊழியத்தில் **எதிர்ப்புகளும், எதிரிகளும்** அதிகம். எங்களுக்கு அதைப்பற்றிய தகவல்கள் வந்துள்ளது. ஆகவே நீங்கள் **உங்கள் பத்திரிகையில்** உங்களின் ஊழிய, **பயண விவரங்களை** தயவுசெய்து வெளிடவேண்டாம். உங்கள் நன்மைக்காகவே இதை கூறுகிறேன். நீங்கள் ஊழியத்துக்கு **புறப்படும் நாள் –** ஊழியத்திலிருந்து **திரும்பும் நாள்** எதிரிகளுக்கு **தெரிய கூடாது** என்றார்கள்.

அவர்கள் கேட்டுக்கொண்டபடி கடந்த 6 வருடங்கள் என் ஊழிய விபரங்களை ஜாமக்காரனில் **வெளியிடாமலிருந்தேன்.** ஆனால் பல வருடங்களாக என வாசகர்கள் விடுத்த அன்புவேண்டுகோளுக்கிணங்கி 2019 செப்டம்பர் மாதத்திலிருந்து **ஒரு வருடம் முழுவதும்** உள்ள ஊழிய பிரயாண விவரங்களை எல்லா மாநிலங்களில் எல்லா **வாரங்களிலும்** எந்தெந்த **ஊரில்** எந்தெந்த **நாட்களில்,** எந்தெந்த **மாதங்களில்** என் கூட்டங்கள் நடக்கிறது என்பதைப்பற்றிய விவரங்களை எழுதி கூட்டம் நடத்தும் ஆயர்களோடு தொடர்பு கொள்ள அவர்களின் **தொலைபேசி – கைபேசி** எண்களுடன் **வெளியிட்டேன்.**

எனக்கு என்ன நடந்தாலும் **என் ஆண்டவருக்கு தெரியாமல்** எதுவும் நடக்க போவதில்லை. **மரணத்துக்கு 45 வருடங்களாக** என்னை ஆயத்தப்படுத்தி. **மரணத்தை சந்திக்கவும்.** என் **ஆண்டவர் பாதத்தில்** சேரவும் மிக மிக **ஆவலாக இருக்கிறேன்.** என் **மனைவி** – என் **பிள்ளைகள்** யாவரையும் என் மரணத்தை அவர்கள் காண அல்லது என் **மரண செய்தியை** அவர்கள் கேட்க அவர்களை **ஆயத்தப்படுத்திவிட்டேன்.**

ஆகவே எனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை. என் **ஊழிய விவரங்களை** எனக்காக **ஜெபித்து – காணிக்கைகளை** அனுப்பிக்கொண்டிருக்கும் **இந்தியா – வெளிநாடுகளிலுள்ள** அனைத்து பாஷைகள் பேசும் ஜாமக்காரன் **வாசகர்கள் அறிய வேண்டும்.** அப்போது தான் அவர்கள் **எனக்காக ஜெபிக்க முடியும்.** வாசகர்களின் ஊர் அருகே **என் கூட்டங்கள்** நடந்தால் அந்த கூட்டங்களில் அவர்கள் கலந்துகொண்டு என்னை நேரில் சந்திக்கவும் ஆலோசனைகளை பெறவும் – **ஜெபிக்கவும்** வசதியாக இருக்கும். வாசகர்கள் தொடர்ந்து ஜெபியுங்கள் – நானும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

---

# 2020ல் என் ஊழிய விவரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| பிப்ரவரி | **10-2-2020** | **to** | **15-2-2020** | **சோர நாடு கிராம சுவிசேஷ ஊழியம் (Soranadu)** |
| பிப்ரவரி | **21-2-2020** | **to** | **23-2-2020** | **தண்டா ஆதிவாசிகளின் கிராம சபை கூட்டம்** |
| | **28-2-2020** | **to** | **1-3-2020** | இங்கிலீஸ் CSI சர்ச் கன்வெண்ஷன் (மிலிடெரி லைன்) **திருநெல்வேலி** |
| மார்ச் | **6-3-2020** | **to** | **8-3-2020** | **CSI St. லூக்கா சர்ச் கன்வெண்ஷன் திருப்பூர்** |
| மார்ச் | **20-3-2020** | **to** | **22-3-2020** | **கிரைஸ்ட் சர்ச் CSI கன்வெண்ஷன், கோயமுத்தூர்** |
| ஏப்ரல் | **3-4-2020** | **to** | **5-4-2020** | **St. பீட்டர்ஸ் சர்ச், சாட்சியாபுரம்** |
| ஏப்ரல் | **6-4-2020** | **to** | **8-4-2020** | **West Gate C.S.I. சர்ச், மதுரை** |
| ஏப்ரல் | **17-4-2020** | **to** | **19-4-2020** | **ஜார்கண்ட் CNI சர்ச்,** |
| ஏப்ரல் | **24-4-2020** | **to** | **26-4-2020** | **பஞ்சகாலா CSI சர்ச் கன்வெண்ஷன்,** |
| மே | **4-5-2020** | **to** | **5-5-2020** | **கக்கமூலா ஐக்கிய கன்வெண்ஷன் (கேரளா)** |
| மே | **8-5-2020** | **to** | **10-5-2020** | **தேவிகோடு CSI கன்வெண்ஷன்,** K.K. CSI Diocese |
| மே | **13-5-2020** | **to** | **14-5-2020** | **கல்லடிசித்தம் (பாரபுரம்) CSI கன்வெண்ஷன்,** |
| மே | **15-5-2020** | **to** | **17-5-2020** | **பிரகாச புரம் CSI கன்வெண்ஷன்,** Tuticorin CSI Diocese |
| மே | **22-5-2020** | **to** | **24-5-2020** | **சாயர்புரம் CMS கன்வெண்ஷன்** |
| மே | **26-5-2020** | **to** | **27-5-2020** | **கிழக்கு பாரப்பாடி TDTA சர்ச் கன்வெண்ஷன்** |
| ஜூன் | **SRI LANKA இலங்கை மெத்தடிஸ்ட் சர்ச் ஊழியர் மாநாடு** | | | |

# கொரோனா வைரஸ்

## மரண ஆபத்திலிருந்து தேசம் – மக்கள் காப்பாற்றப்பட என்ன செய்ய வேண்டும்

உண்மையான உயிருள்ள தெய்வத்தை அறிந்தவர்கள் **உபவாசம்** செய்து கர்த்தரிடம் பாரத்தோடு ஜெபித்து மன்றாடினால் அந்த கொல்லும் வியாதி நம்மையும் நம் தேசத்தையும் தாக்காதபடி கர்த்தர் பாதுகாப்பை கொடுப்பார்.

அப்படியே பெரும் மரண பாதிப்புக்குள்ளாயிருக்கம் சீனா போனற நாடுகளையும், மற்ற நாடுகளையும் கர்த்தர் காத்து ஷேமத்தை உண்டாக்குவார்.

!

சீனாவில் உள்ள சீன மதத்தை சேர்ந்தவர்கள் ஆராதிக்கும் தெயவம் பிசாசு ஆகும். அதைதான் அவர்கள் **டிரேகான்** என்கிறார்கள். அந்த சீனர்கள் பிசாசசைவிட்டு உயிருள்ள தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை தேட ஆரம்பித்தால் நிச்சயம் கர்த்தர் அந்த தேசத்தின்மேல் மனமிறங்குவார்.

நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும் அவரை அடைக்கவும்தக்கதாக ஒரு மனுஷனை (கர்த்தர் தேடுகிறார்) எசே. 22:30

**MARCH - 2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.